நாலும் இரண்டும்

அ. மு. பரமசிவானந்தம்

தமிழ்க்கலைப் பதிப்பகம்
தமிழ்க்கலை இல்லம்
சென்னை 30

நாலும் இரண்டும்

அ. மு. பரமசிவானந்தம்

தமிழ்க்கலைப் பதிப்பகம்
தமிழ்க்கலை இல்லம், சென்னை-30

முதற் பதிப்பு : மார்ச் 1976

உரிமைப் பதிப்பு

விலை ரூ. 2-50

விற்பனை :
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை

அச்சிட்டோர் :
மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ்,
சென்னை-2.

முன்னுரை

சென்னை வானொலி நிலையத்தார் மக்கள் வாழ்வு மலர நல்லபல ஆக்கப் பணிகள் செய்து வருகின்றனர். அவற்றுள் ஒன்று—சிறந்தது விடியற்காலையில் குறள் விளக்கம் தந்தது. தற்போது நாலடியின் விளக்கம் நடைபெறுகின்றது. தொடக்கத்தில் பல அறக்கருத்துக்களும் குறள் அதிகார அடிப்படை விளக்கங்களும் நடைபெற்றன. விழித் தெழுந்தும் எங்கும் வாழும் தமிழ் மக்கள் இந்த அறவுரைகளைத் தமிழிலேயே கேட்டு, வாழ்வினைச் செம்மைப் படுத்திக் கொள்ள முயன்றிருப்பாரன்றோ!

இத்தகைய பேச்சு வரிசையில் எனக்கும் இடமளித்தனர் வானொலி நிலையத்தார். குறள் அதிகாரம் பற்றியும் தனிக் குறள்கள் பற்றியும் ஐந்து முறையும் (ஒவ்வொரு முறையும் மூன்று நாட்கள்) நாலடி பற்றி இரு முறையும் பேசினேன். அவை இந்நூலில் முதல் இருபத்தொரு தலைப்புக்களில் வெளி வருகின்றன. பின் அறம் பற்றிய ஐந்து தலைப்புக்கள் இடம் பெறுகின்றன. (இவை நிகழ்ந்த நாட்கள் நினைவில்லை யாதலின் குறிக்கப் பெறவில்லை). எனவே இந்நூலில் நாலடியும் குறளும் பெரும்பான்மையாக அமைகின்ற மையின் இந்நூலுக்கு 'நாலும் இரண்டும்' என்றே பெயரிட்டேன். செவிவழிக் கேட்ட தமிழ் மக்கள் முன் இந்நூலை வைத்து வணங்குகின்றேன்.

என்னை இத்துறையில் ஆற்றுப்படுத்தியும் இந்நூல் வெளியிட இசைந்தும் துணைபுரிந்த சென்னை வானொலி நிலையத்தாருக்கு என் நன்றி.

தமிழ்க்கலை இல்லம்,
சென்னை-30.
19-3-76

அன்புள்ள,

அ. மு. பரமசிவானந்தம்

பொருளடக்கம்

அதிகாரங்கள்			பக்கம்
1.	அடக்க முடைமை	27-8-71	5
2.	ஒழுக்க முடைமை	28-8-71	8
3.	பிறனில் விழையாமை	29-8-71	12
குறள் நெறி			
4.	அன்பீனும் ஆர்வ முடைமை	13-1-73	16
5.	அன்புற் றமர்ந்த வழக்கென்ப	14-1-73	19
6.	அறத்திற்கே அன்பு சார்பென்ப	15-1-73	22
7.	தெளிவி லதனைத் தொடங்கார்	7-2-74	25
8.	வகையறச் சூழாது எழுதல்	8-2-74	27
9.	செய்தக்க அல்ல செயக்கெடும்	9-2-74	30
10.	மடியுளாள் மாமுகடி என்ப	10-7-74	32
11.	பொறியின்மை யார்க்கும் பழியன்று	11-7-74	36
12.	தெய்வத்தான் ஆகாதது எனினும்	12-7-74	39
13.	மிகச் செய்து தம் எள்ளுவாரை	18-1-75	43
14.	பகை நட்பாம் காலம் வருங்கால்	19-1-75	45
15.	பேதைமை என்பதொன்று	20-1-75	48
நாலடி			
16.	அறுசுவை உண்டி	28-9-75	52
17.	துகள்தீர் பெருஞ் செல்வம்	29-9-75	55
18.	யானை எருத்தம்	30-9-75	57
19.	அறிமின் அறநெறி	17-3-76	61
20.	அடைந்தார்ப் பிரிவும்	18-3-76	63
21.	இறப்ப நினையுங்கால்	19-3-76	66
அற நெறி			
22.	அறம் வெல்லும் பாவம் தோற்கும்		69
23.	யாதும் ஊரே யாவரும் கேளிர்		72
24.	எல்லாரும் இன்புற் றிருக்க		76
25.	ஊழ் வினையும் ஆள் வினையும்		79
26.	நல்ல உள்ளம்		84

அடக்க முடைமை

27-8-71

மனிதன் வாழப் பிறந்தவன். அவன் வாழ்வே உலகை நேரிய வழியில் அழைத்துச் செல்வது. எனவே அவன் வாழ்வு செம்மையாக இருப்பின் உலகம் செம்மை நெறியில் செல்வதாக அமையும். இதையே 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்றனர் பழம் புலவர்.

வள்ளுவர் இத்தகைய அறத்தாறு வாழும் வாழ்க்கை நெறி செம்மையாக நடைபெற வழி வகுத்தவர். மனிதன் வாழ்வில் வழுக்கி விழும் காலத்து ஊன்றுகோலாக அமைவது திருக்குறளாகும். இக்குறள் 133 அதிகாரங் களைக் கொண்டது. அவற்றுள் அடக்கமுடைமையும் ஒன்று.

'தான் அடங்கத் தன் குலம் விளங்க' என்பது பழ மொழி. தனி மனிதனோ அல்லது சமுதாயமோ அடங்கா நிலையில்தான் உலகில் பல கொடுமைகளும் பெரும் போர் களும் நிகழ்கின்றன. அடக்கம் மக்கள் வாழ்வில் மலரின், நாட்டிலும் உலகிலும் பல கொடுமைகள் இல்லாது ஒழியும். ஒரு சிலர் தம்மைப் பற்றி அறியாது, அடங்காது அல்லாத செயல்களைச் செய்வதாலேயே தனிமனிதப் போராட்டம், சமுதாயப் போராட்டம், போர் முதலியன நிகழ்கின்றன. வள்ளுவர் இவற்றை எண்ணியே அடக்கமுடைமையை நமக்கு நன்குணர்த்துகிறார்.

'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' எனக் காட்டிய வள்ளுவர், அப்பொருள் அடக்கமே என்பதை, 'காக்க பொருளா அடக்கத்தை' எனக் காட்டுவர். எனவே, உலகில் பொருளை விரும்புவர்—தம்மை ஒரு பொருளாக உலகத்தார் நினைக்க எண்ணுபவர் அடக்கத்தைக் காக்கக் கடமைப் பட்டவர். அவ்வாறு காத்தோம்பி வாழ்ந்த பெரியார் பலர் வரலாற்றில் போற்றப் பெறுகின்றனர். அவ்வரிசையில் இறுதியாக இடம் பெற்றவர் அண்ணல் காந்தி அடிகளார். வள்ளுவருக்கு ஒவ்வொருவரும் காந்தி போன்று வாழ வேண்டும் என்பது ஆசை. எனவேதான் இவர் இந்த அதிகாரத்தில் 'அடக்கம் அமரருள் உய்க்கும்' எனவும், 'சீர்மை பயக்கும்' எனவும் அடக்கத்தால் இம்மை மறுமை இன்பங்கள் இரண்டையுமே பெறலாம் எனவும் சுட்டிக் காட்டுகின்றார்.

உலகில் உயர்ந்துள்ள மலை போன்ற அடக்கம் உடை யாரால் எது வரினும் கலங்காது ஏற்றுக் காலத்தை வென்று வாழ முடியும் என்று வள்ளுவர் காட்டி, அம்மலை போல் யாருக்கும் வழிகாட்டியாகவும் அவர்கள் விளங்க முடியும் எனவும் சுட்டுகின்றார். மேலும் அவ்வடக்கமாகிய பணிவு செல்வம் உடையவற்கே இன்றியமையாதது என்று சுட்டிக் காட்டவும் அவர் தவறவில்லை.

அடக்கம் என்பதுதான் என்ன? மற்றவர் என்ன சொன்னாலும் எதிர்த்துப் பேசாது தலைகுனிந்து ஏற்றுக் கொள்வதா? இல்லை. வள்ளுவர் அடக்கத்தை மூன்று வகையில் காட்டுவர். செயல், சொல். எண்ணம் மூன்றுமே மனிதனிடம் உள்ளவை, இம்மூன்றிடத்தும் அடக்கம் கொள்வதே மனித வாழ்வு என்பதை வள்ளுவர் காட்டு கிறார். தன் உறுப்புக்கள் அனைத்தையும் அடக்கும் ஆமை

போல் நம் அடக்க உணர்வு செயலில் வெளிப்பட வேண்டும் என்பது அவர் கருத்து. ஆம்! 'ஐம்புல அடக்கமே' உலக வாழ்வுக்கு இன்றியமையத தன்றே! 'கை நீட்டாதே' என்று சாதாரண மக்கள்கூட இன்றும் பேசுவது நம் காதில் விழும். 'கைநீட்டி ஒருவரை அடிக்காதே' என்பது அதன் பொருள்.

பலருக்கு வாயடக்கம் இல்லாமையே இன்றைய உலகில் பல தீமைகளுக்கு வித்தாவதைக் காண்கிறேம். எனவே, வள்ளுவர் வாயடக்கத்தை, மூன்று குறட்பாக் களால் விளக்குகிருர். உடல் அடக்கத்தினையும் மன அடக்கத் தினையும் ஒவ்வொரு குறட்பாவினுல் சொல்லியவர், 'நாவடக்கம்' நல்கும் நன்மையினையும் அது இல்லாவிடின் நிகழும் கொடுமைகளையும் எண்ணி, மூன்று குறட்பாக்களை நமக்குத் தருகின்ருர். 'யாகாவாராயினும் நாகாக்க' என் கிருர், அதுவே எல்லாக் கொடுமைகளுக்கும் வித்தா கின்றமையின்,

வாக்கால் வரும் குற்றத்தை அறிஞர்கள் பல வகையில் பிரிப்பர் 'பொய்யே, குறளை, கடுஞ்சொல், பயனில் சொல்' என நான்காகக் காட்டுவர் சாத்தனுர். இத்தகைய கொடுமை பயக்கும் சொற்களில் ஒன்றை மனிதன் பயன் படுத்தினுலும், அம் மனிதன் ஆற்றும் பல நல்ல செயல்கள் பயனற்றனவாகக் கழியும். 'நல்லவன்தான் அவன்; ஆயினும் வாயால் கெடுகிருன்' என்று உலகோர் பேசுவது நம் காதில் விழுகின்ற தன்றே?

வள்ளுவர் இந்த நாவடக்கம் இல்லாவிடின், அது தரும் நிலைத்த கொடுமையினை மற்ருெரு விளக்கத்தின் வழியேயும் காட்டுவர். தீயினுல் சுடப்பட்ட புண் ஆறிவிடும்; புறத்தில் ஒருவேளை வடு மட்டும் தெரியும்; உள்ளத்தில் அது பற்றி

ஒரு சிறு வடுவும் தெரியாது எனக் காட்டி, நாவினுல் சுட்ட வடு என்றென்றும் ஆருது எனக் குறிக்கின்ருர். ஆம்! தீயினுல் சுட்டதைப் 'புண்' என்றும், நாவினுல் சுட்டதை 'வடு' என்றும், சொல்லைக் கொண்டு காட்டியே, நாவடக்கம் இன்மை என்றும் நீங்காக் கொடுமை இழைப்பதை உணர்த்துகிருர்.

இறுதியாக இத்தகைய செயலாலும் சொல்லாலும் அடக்காது கொடுமை இழைப்பதற்கு அடிப்படைக் காரணம் மன அடக்கமின்மையே என்றும், மனத்தில் மூளும் சினமே பிற இருவகைக் கொடுமைகளுக்கும் காரணம் என்றும் வள்ளுவர் காட்டுகின்ருர். மனவடக்கமுற்று, மற்றவரோடு மாறுபட்டுச் சினங் கொள்ளாது வாழின் நாவடக்கம் உடலடக்கம் இரண்டும் இயல்பாய் அமைந்து விடுமன்ருே! ஆம்! இவ்வாறு மனவடக்கம் பெற்ற நல்லவனிடம் அறச்செல்வி தானே வழி வினவிச் சென்றடைவாள் எனவும், அடையின் அவன் ஆக்கம் சிறக்கும் எனவும் வள்ளுவர் இறுதியாகச் சுட்டி, உலகில் அறம் பற்றி அடக்க முற்று வாழ்பவன் சிறந்து ஓங்குவதோடு, வையமும் நெறியல்லா நெறியில் செல்லாது நேர்மை வழியில் சிறக்க வழி காட்டுவான் என்பதையும் சுட்டுகிருர். எனவே, வையம் வளம் பெற்று வாழ மனிதனுக்கு அடக்கம் இன்றியமையாது வேண்டப்படுவது என்பது தேற்றம்.

ஒழுக்க முடைமை

28-8-71

மனிதன் உலகில் எல்லாவற்றையும்விட ஒன்றையே அதிகமாக மதிக்கிருன். ஆம்! அம் மதிப்பிற்குரியது அவன் உயிரே ஆகும். எதனை விடத் தயாராக இருப்பினும்

உயிரைவிட மட்டும் யாரும்—எதுவும் தயாராக இருப்ப தில்லை. எதிர்பாரத காரணங்களால் நிகழும் ஒருசில தற்கொலைகளைத் தவிர்த்து உலகம் இந்த உயிர் ஓம்பும் நெறியிலேயே வாழ்கின்றது. ஆயினும் இத்தகைய வாழ்க் கையில் உயிர்களை ஆற்றுப்படுத்தும் வள்ளுவர் அவ்வுயிருக்கு மேலாக மற்றென்றினை வலியுறுத்திக் காட்டுகின்றார். அது தான் ஒழுக்கம். 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்' என்பது அவர் வாக்கு. இதனால் மனித வாழ்வே—சமுதாய வாழ்வே இவ்வொழுக்கத்தின் அடிப்படையில் கட்டப் பெற்றது என்பது தெற்றெனத் தெரிகின்ற தன்றோ?

மக்களாகப் பிறந்தவருக்கு வரையறுக்கப்பட்ட வாழ்க்கை நெறிகளும் அவற்றின் வழியே அவர்களைச் செலுத்தும் ஒழுகலாறுகளும் உள்ளன. அத்தகைய ஒழுக்க நெறிகளை அன்றி மனிதன் வேறு வகையில் செல்வானாயின், அது அவனுக்கு மட்டுமின்றிச் சமூகத்துக்கே பெருங்கேடு தருவதாகும். உயிரினும் மேலாய ஒழுக்க நெறியை இன்றைய உலகில் பலர் மறந்ததனாலேயே உலகிலும் நாட்டிலும் பல கொடுமைகள் தாண்டவமாடுவதைக் காண் கின்றோம். அவ்வொழுக்கமன்றி வேறு துணை, உயிரினத் துக்கு இல்லையெனக் கண்ட வள்ளுவர் 'தெரிந்தோம்பித் தேரினும் அஃதே துணை' என ஏகாரமிட்டு - அறுதியிட்டுக் கூறுகின்றார்.

குலத்தாலோ பிறவற்றாலோ உயர்ந்தாராகத் தம்மைக் கருதி வாழ்வாரை நோக்கி, 'ஒழுக்க முடைமை குடிமை' என்றும், 'பிறப் பொழுக்கம் குன்ற (அனைத்தும்) கெடும்' என்றும் வள்ளுவர் உயிரொடு பிறந்த அவ்வொழுக்கத்தின் இன்றியமையா நெறியைச் சுட்டிக் காட்டி அறமுரைக்

கின்றார். ஆயினும் மனித இனம் அவ்வொழுக்க நெறி நின்று வழுக்கி விழுந்து எங்கோ செல்கின்றது.

ஒழுக்கம் என்பதுதான் யாது? 'இன்னார் இன்னின்ன வகையில் வாழ வேண்டும்' என வரையறுத்த சில வாழ்க்கை நெறிகளே அவ்வொழுக்க அடிப்படைகளாகும். எடுத்துக் காட்டாக மாணவர், ஆசிரியர் போன்றோருக்குப் பவணந்தி யாரும் பிறரும் காட்டும் ஒழுக்க நெறிகளை எண்ணலாம். அவற்றுள் ஒருசில கால வெள்ளத்தால் மாறும் நிலையினை உலகிடைக் காணினும், அடிப்படை நெறிகள் மாறுவது இல்லையென்பது தெளிவு. உலக நெறிக்கு ஏற்பத் தம் வாழ்வினை அமைத்துக் கொண்டு, அடிப்படை ஒழுகலாற்று நெறிகளையும் மறக்காது வாழும் வாழ்வே தனிமனிதனையும் சமுதாயத்தையும் வாழ வைப்பது என்ற உண்மையைத் தான் வள்ளுவர்,

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் " **(10)**

என்று இறுதிக் குறளில் விளக்கிக் காட்டுகின்றார். 'உலகத்தோடு ஒட்ட ஒழுகுத'லாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல், என விளக்கம் தருகிறார் உரையாசிரியர். இவர் உரை 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற தொல்காப்பியத்தின் அடியில் எழுந்ததே ஆகும். வள்ளுவர் இக் குறள்வழிக் காட்ட வந்த கருத்து, 'உலகம் வாழத் தான் வாழவே மனிதன் பிறந்தான்—அவன் பிறப்புக்கு ஏற்ப—சாதிக்கு ஏற்ப அன்று. மனிதப் பண்பாட்டு அடிப்படையில் அவன் மேற்கொண்டு ஒழுக வேண்டிய நெறிகள் உள்ளன. அவற்றை ஏட்டில் கற்கும் மனிதன் தன் வாழ்விலும் நாட்டு வாழ்விலும் பொருந்த விட

வில்லையாயின் அவன் அதனைக் கற்பதால் பயன் விளையாது' என்பதேயாம். எனவே உலகத்தோடு ஒட்ட உலகம் வாழத் தான் வாழும், 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாள ளுரும்' தியாக உணர்வோடு நல்லோர் ஒழுகுவார்களாயின் நாடு நாடாகும் என்ற உண்மையை உணர்த்துகிறார் வள்ளுவர். எந்த நாளைக் காட்டிலும் இன்று இந்தச் செயல் மிகவும் வேண்டப் பெறுகின்றது. 'உலகம் அனைத்தும் தனக்கு' என்ற உணர்வு தலை தூக்கி நின்று, 'தான் உலகுக்கு' என்ற உணர்வு தேயும் இந்த நாளில் இந்த ஒழுக்கம் இன்றியமையாது வேண்டப்படுவ தன்றோ! இந்த ஒழுக்கம் சொல்லாலும் செயலாலும் உணர்த்தப் பெறும் என்பதனையே வள்ளுவர் கடைசி இரு குறட்பாக்களில் விளக்கிக் காட்டுகிறார். 'தீய வழுக்கியும் வாயால் சொல்லல்' ஆகாது என்பர் அவர். 'சொல்லல்' என்றாலே போதும். அதன் கொடுமை கருதியே வள்ளுவர் தமக்குரிய வற்புறுத்தும் இயல்பான நெறி நின்று 'வாயால் சொலல்' எனக் காட்டுகின்றார்:

வாழும் உலகத்தொடு ஒன்றி வாழாமலும், வாய்க்கு வந்தபடி பேசியும் வாழ்வார் உலகில் எல்லா நலன்களையும் இழப்பர்; பழி எய்துவர்; இடும்பை உறுவர் எனப் பல வகையில் வள்ளுவர் தாம் விளக்க வந்த ஒழுக்க நெறியையும் அதை மேற் கொள்ளார் தாமும் கெட்டு உலகையும் கெடுக் கும் கொடுமையையும் வற்புறுத்துகின்றனர். வள்ளுவர் வாய்மொழியைக் கற்கும் நாம், அவர் காட்டியபடி நம் உயிரினும் மேலாக, உலக வாழ்வொடு ஒட்டிய உறவாக, ஒழுக்கத்தை மேற்கொண்டாலன்றி உலகம் உய்ய வழி யில்லை. இதை உணர்ந்து உலகொடு உலகாக, மக்களொடு மக்களாக வாழ்ந்து காட்டிய நம் தலைவர் பலருள் அண்ணல்

காந்தியடிகள் நம் கண்முன் நிற்கிறார். தாம் உயர்ந்தவர் என்ற நிலை மறந்து, ஏழையரோடு ஏழையாக, எங்கோ மூலை முடுக்குகளிலெல்லாம் அவர்களொடு அவர்களுக்காகவே வாழ்ந்து தம் மனிதப் பண்பைக் காட்டினார் காந்தியடிகளார். அடிகளார் காட்டிய அந்த ஒழுக்க நெறிநின்று. நாமும் 'நமக்கு உலகம்' என்பதை மறந்து 'நாம் உலகுக்கு' என்ற ஒழுக்க உணர்வில் செயலாற்றின் உய்தியுண்டு. இன்றேல் ....யா ரறிவார்?

பிறனில் விழையாமை

29-8-71

வள்ளுவர் வாழும் தமிழ்ச் சொற்களுக்குப் பலப்பல புதுப் பொருள்களைக் காட்டும் இயல்பினர். அறிவு—தீய செறுவார்க்கும் செய்யாமை என்பர். அறம்—மனத்துக்கண் மாசிலன் ஆதல் என்பர். கல்வி—தாம் இன்புறுவது உலகின் புறல் என்பர். வாய்மை—தீமை இலாத சொலல் என்பர். இவ்வாறு பொருள் காண்பதன் வழியே அச்சொற்களின் சிறப்பியல்புகளையும் அவற்றைப் பயன்படுத்தும் தமிழ்ச் சமுதாயத்தின் உயர்ந்த பண்பாட்டினையும் வள்ளுவர் விளக்கிக் காட்டுவர். அதே அடிப்படையில் 'ஆண்மை' என்ற சொல்லுக்கும் சிறந்த பொருள் காண்கின்றார் இவர். ஆண்மையிற் சிறந்தது 'பேராண்மை'. — உண்மையே! வள்ளுவர் எதனைப் பேராண்மை என்கிறார்? பிறர் மனை நோக்காப் பெருநெறியைத்தான்!

'பிறர்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு' (8)

என்பது அவர் வாக்கு. இக்குறள் வழியும் இது உள்ள அதிகாரத்தின் வழியும் ஆண்மைக்கு நல்ல இலக்கணம் கற்பிக்கிறார் இவர். ஒழுக்கமுடைமைக்குப் பின் இவ்வதிகாரம் அமைத்துள்ள நிலையும் இதன் சிறப்பை நன்கு விளக்குகிறது.

மனையாகிய பெண்மை நலத்தை ஆண்மை விரும்புவது இயல்பு. ஆனால் வள்ளுவரோ விரும்பாமையைப் பேராண்மை என்கிறார். உண்மைதானே. அப்பெண்மை நலம்—இன்பம் அறத்தாறு அமைவதே சிறப்பு. அப்போதே அதனைப் பெறுபவர் ஆண்மை உடையவர் ஆவர். அன்றித் தான், தன் ஆடவர் நிலைக்கு 'எளிதென இல் லிறக்கும்' கொடுமை அவ்வாண்மையை அழிப்பதாகும் என்பதனையே வள்ளுவர் தெளிவாக்குகிறார். அறத்தாறு இதுவென அறிந்து, ஒத்த மனைவியொடு இல்லற வாழ்வு நடத்துபவன் பிறர் மனைவியின் பெண்மையை விரும்பினால் அறநெறி மாசுபடும் எனச் சுட்டிக் காட்டி, அப்படியே அவன் இல்லாள் இத் தீய நெறியில் பிறர் ஆண்மையை விரும்பின் அவன் உள்ளம் என்னாகும் என்பதையும் சுட்டிக் காட்டிச் சூடு கொடுத்து, மக்கள் இனத்தைச் செம்மை நெறியில் ஆற்றுப் படுத்துகின்றார். அறிவியலான் இல்வாழ்வான் எவனும் இந்தப் பிறன் மனையாளை விரும்பும் நெறி செல்லான் என்று காட்டியும் இவ்வுண்மையை வற்புறுத்துகின்றார் வள்ளுவர்.

இருபதாம் நூற்றாண்டுக்கு இடையில் வாழும் மேலை நாட்டு நாகரிகம் என்னும் சகதியில் வாழ்வாரும் பிறருக்குரிய பெண்களை விடுதலை செய்து ஏற்பதைக் கொள்கின்றனரே யன்றி, பிறர் பொருளாக உள்ள பெண்மையை நயப்பதை வெளிப்படையாகக் காட்டுவதில்லை அன்றோ? எனவே

கொடிய மாறுபாட்டிலும்கூட இக்கொடுமை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இருபதாம் நூற்றாண்டில் எதைச் செய்யினும் தவறில்லை என்ற ஒரு கொள்கைவழி, இத்தகைய அறங்களை எண்ணுவார் உள்ளனர். என்றாலும், வள்ளுவர் இவ் வாண்மையாகிய அறத்தை நுணுகி ஆராய்ந்து செயலில் மட்டுமின்றிச் சிந்தையிலும் இந்நிலை கொடியது எனக் காட்டுகிறார். பெண்மையை உளத்தால் நயத்தலும், பிறர் மனை நோக்குதலுமாகிய உளத்தாலும் பார்வையாலும் உண்டாகும் குற்றங்களைச் சொல்லிய பின்பே, 'பிறர்க் குரியாள் தோள் தோயும்' உடற் செயலைக் காட்டுகின்றார். எனவே உளத்தாலும் நோக்காலும் செயலாலும் மூன்றி டத்தும் விரும்பத்தகாத ஒன்று இது என்று காட்டி அதை விரும்பாதாரே-ஆண்மை உடையவரே-ஆடவர் என்ற விளக்கத்தையும் வள்ளுவர் தருகிறார்.

எந்த அறத்தை வற்புறுத்தினாலும் வள்ளுவர், அவற்றுக்கு அடிப்படையாகத் தோன்றும் எண்ணத்தையும் அது முகிழ்க்கும் உள்ளத்தையுமே சுட்டிக் காட்டுவர். 'உள்ளத்தால் உள்ளலும் தீதே', 'மனத்துக்கண் மாசி லனாதல்' என்பன அவர் வாக்குகளில் சிலவாகும். இந்த அடிப்படையை நன்குணர்ந்த கம்பர் இராவணன் இறந்த பிறகு, அவன் உள்ளத்தில் சீதையைப் பற்றிய கருத்து இருப்பினும் தவறு என்பதை உணர்த்தவே,

" கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில்
கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ
ஒருவன் வாளி "

என்ற அடிகளைப் பாடி இராவணன் உள்ளத்தையும்

தூய்மையாக்குகிறுர். எனவே, பிறர்மனை நோக்கலும் பிறர் மனையை உளத்தால் எண்ணுதலும் செயலொடு ஒக்கும் எனக் காட்டி, அனைத்துமே தவருன செயல் களாகும் என விளக்குகிறுர் வள்ளுவர்.

இந்த உண்மையை உணரும் போது ஆண்கள் தவறின், ஆண்மை நீங்கும் என்ருல் பெண்மைக்கு இந்த நியதியில் இல்லையோ என எண்ணத் தோன்றும். வள்ளுவர் பொது வாக இருபாலரையும் உள்ளடக்கிஞரோ என்று உற்று உணரும் படியாக, 'பிறன் கடை நின்ருரிற் **பேதையர்** இல்' என்றும், 'தெளிந்தார் இல் தீமை புரிந்தொழுகுவார்' என்றும் கூறுகிருர். பின் வந்த பாரதியாரும் 'கற்புநிலை என்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அதைப் பொது வில் வைப்போம்' என்று பாடிஞர். எனவே தமக்குரியர் அல்லாதாரிடம் இன்பம் பெறும் நிலை இருபாலருக்கும் தவறுடைத்தே எனத்தெளிதல் வேண்டும்.

இத்தகைய பிறனில் விரும்பாப் பேராண்மை உடையார் அறனும் ஒழுக்கமும் உடையராய் உயர்ந்தோரால் போற்றப் பெறுவர் என்பதும், அல்லார் வேறு வகையில் மதிக்கப் பெறுவர் என்பதும் தெளிவு. உலகு வள்ளுவர் வாய்மொழி அறிந்து, அறம் உணர்ந்து ஆன்ற ஒழுக்க நெறி நின்று உயர்வதாக!

அன்பினும் ஆர்வ முடைமை

13-1-73

உலகில் மனிதன் தனித்து வாழப் பிறந்தவனல்லன். பிறவிலங்கினத்தி னின்றும் வேறுபடுத்தப்பட்ட மனிதன் சேர்ந்து வாழவே பிறந்தவன். எனவேதான் மேலை நாட்டினர் அவனைச் 'Social Animal' (சமுதாய விலங்கு) என அழைக்கின்றனர். ஆம்! அவன் அன்று முதல் இன்று வரையில் கூடி வாழவே பிறந்தவன்.

இன்றைய உலகில் சிலர், ஏதோ தாம் தனித்து உயர் நிலையில் வாழ முடியும் என எண்ணி, அதற்கேற்பத் தம் செல்வம், கல்வி, பதவி, பட்டம் முதலியவற்றைக் கணக்கிட்டு உயர்த்திக் கொள்ள நினைத்தாலும், சமுதாயம் அவர்களை அந்நிலையில் என்றும் விட்டு வைக்காது என்பதை வரலாறு காட்டுகிறது. அப்படியே விட்டு வைப்பதாகக் கொள்ளினும் அந்நிலை தனியான காட்டு வாழ்க்கை நிலையில் அமையுமே யன்றி சமுதாய நாட்டு வாழ்க்கையில் அமையாது. எனவே மனிதன் கூடி வாழவே பிறந்தவன்.

இக்கூட்டு வாழ்வின் அடிப்படைத் தத்துவத்தை அன்பின் வழியே காட்டுகின்றார் வள்ளுவர், மனை வாழ்வு, வாழ்க்கைத் துணையாம் மனையாள், மக்கட்பேறு இவைகளை யெல்லாம் காட்டிய வள்ளுவர், மனித வாழ்வு அந்த எல்லையோடு அமையாது பரந்த உலகில் அனைவரையும் நண்பால் பிணைத்துத் தழுவிச் செல்ல வேண்டிய இன்றியமையாத சமுதாய நெறியையும் வற்புறுத்துவான் தொடங்கி, அனைத்துக்கும் அடிப்படையான அன்பினை முதலில் காட்டு

கிறுர். முதல் மூன்று குறளிலும் அன்பு தோன்றும் நிலே, அன்புடையார்தம் தன்மை, அதுவே உலக நெறி என்ற உண்மை இவைகளே விளக்கி, பின் அவ்வன்பால் மனிதன் பெறும் பயனே அடுத்த குறளால் சுட்டுகிருர். ஆம்! அதுவே 'நண் பென்னும் நாடாச் சிறப்'பாகும். இதோ அவர் வாக்கு

' அன்பீனும் ஆர்வ முடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு' (குறள் 74)

இக்குறள் இரு பகுப்பாகக் கொள்ள இடம் தருகின்றது. அன்பிற்கும் நண்புக்கும் இடையில் ஆர்வமுடைமையினே யிடுகிருர் வள்ளுவர். 'அன்பு தரும் ஆர்வமுடைமையை; அவ்வார்வமுடைமை தரும் நட்பென்று சொல்லப்படுகின்ற ஆராய்த லில்லாத சிறப்பினே' என்று இதற்கு விளக்கம் கூறுவார் மணக்குடவர். "யாவரும் நண்பாதல் எல்லாப் பொருளும் எய்துதற்கு ஏதுவாதலின், அதனே 'நாடச் சிறப்பு' என்ருர்" என விளக்கம் தருவார் பரிமேலழகர்.

மனிதன் உலகில் தனக்கு வேண்டியவற்றை பெற்று, மற்ருரோடும் உற்ருரோடும் கலந்து, பெற்றவற்றைப் பகிர்ந்து கொண்டு விருந்து புறந்தோம்பி, சுற்றம் தழுவி, பெரியாரைத் துணைகொண்டு, ஒப்புர வொழுகி,ஒழுக்கமுடையவனுய் வாழவே பிறந்தவன். இந்தப் பெரு நலன்களேயெல்லாம் தருவது அன்பு ஒன்றே என்பதனேத்தான் இந்தக் குறளில் வள்ளுவர் சுட்டிக் காட்டுகின்ருர். நண்புக்கும் அன்புக்கும் இடையில் ஆர்வமுடைமையை வைத்து அதன் ஏற்றத்தை மேலும் நன்கு புலப்படுத்துகின்ருர். ஆர்வமுடைமைக்கு விருப்பமுடைமை எனப் பொருள் காட்டுவர் பரிமேலழகர். ஆம்! அன்பு உண்டாயின் அவ்விருப்பம் தானே வந்து அமையு மாதலான்.

நட்பு என்பதனை ஒன்றுக்குமேற்பட்ட அதிகாரங்களால் பின்னல் விளக்கும் திருவள்ளுவர், இங்கே அன்போடு அதனை இணைத்து, உலக வாழ்வுக்கு அதன் இன்றியமையா நிலையைச் சுட்டுகின்றார். உலகில் பிறந்த எவனும் எதையும் வேண்டாது ஒதுக்கி வாழ முடியாது; இயல்பு மன்று. எனவே பலவற்றைப் பெற்று, பலருடன் ஒன்றி வாழ்வதுவே அவன் பிறந்ததன் பயன். இந்தப் பயனுள்ள வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவதே 'நட்பு' என்பதாகும். பகைவர், வேண்டாதவர் என்று யாரும் இலராய், எல்லோரும் நட்பாளராக இருக்கும் வகையில் ஒருவன் அனைவரோடும் பழகி, அன்பு காட்டி வாழ்வானயின் பிறகு அவனுக்கு உலகில் ஆகாதசெயல் இல்லை; அவன் பெற நினைத் தால் பெறமுடியாத பொருள் இல்லை. எனவே அவன் விருப் போடு மகிழ்ந்து வாழ அடிப்படையாக அமைகின்றது நட்பு. ஆம்! அது நாடாச் சிறப்புத்தானே—அனைவராலும் பெறமுடியாச் சிறப்புத்தானே! இந்த நாடாச் சிறப்பாம் நட்பினைத் தருவது 'அன்பு' ஒன்றே என வள்ளுவர் விளக்கி, மனிதன் அந்த அன்புடையவனய் வாழ வேண்டிய வகை யினை இங்கே வற்புறுத்துகின்றார். நாம் அன்புடையராக வாழின் யாரும் நட்பின ராகி, நாம் வாழ்வாங்கு வாழ இயலும். இந்த உண்மையை விநாயக புராண ஆசிரியர் நன்கு விளக்குகிறார். அவர் வாய் மொழியினைக் கண்டு அமைவோம்!

நொதுமலரும்

" படர்செய் பகையும் உறவாக்கும் பற்றும் அளிக்கும் மனைமைந்தர்

தொடர்பின் வளர்க்கும் அன்பதனல் சோர்ந்தும் அன்பின் வழுவற்க" (*அரசி*.22)

என்ற அவர்தம் எச்சரிக்கை உணர்ந்து, அன்புடையராய் வாழ்ந்து உயர்வோமாக!

அன்புற் றமர்ந்த

14-1-73

வள்ளுவர் தாம் எடுத்துக் காட்ட வந்த பொருளை மெல்லமெல்ல விளக்கிச் செல்லும் பண்பினை உடையவர். அன்பு தரும் விருப்பினையும் அதன் வழியாகப் பெறும் நாடா நட்பினையும் காட்டிய வள்ளுவர், அதனால் பெறுஞ் சிறப்பினையும் அது உலகநெறிக்கு இன்றியமையாதமைந்த பெருநிலையையும் அடுத்த குறட்பாவினால் விளக்குகிறார்.

உலகில் எல்லா உயிர்களும் இன்பத்தை நாடுகின்றன. 'இன்பமே எந்நாளும் துன்ப மில்லை' என்று காணும் வாழ்வினையே அவை விரும்புகின்றன. அந்த இன்பத்தை அடைவது எவ்வாறு? அதற்கு அடிப்படை அன்பேயாகும். உலகத்தின் இன்பத்தினையும் அதன் வழியே பெறும் சிறப்பினையும் எண்ணிப் பார்க்கிறார் வள்ளுவர். இவை யாவும் அன்பாலன்றோ விளைகின்றன எனக் காண்கின்றார். வாய் பாடுகிறது—குறள் உருவாகின்றது.

> " அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
> இன்புற்றா ரெய்தும் சிறப்பு " (75)

என்ற குறட்பாவே அது. இக்குறள் பாவினுக்கு உரையாசிரியர்கள் பலவகையில் பொருள் கொள்ளுகின்றனர். 'வழக்கு' என்பதற்குத் 'தொடர்ந்து வரும் மரபு' என்ற பொருள் கொண்டு, இந்தப் பிறப்பில் இன்புற்று வாழ்வதற்கு, சென்ற பல பிறவிகளில் அன்பு செய்தமையே காரணம் எனக் காட்டுவர் சிலர். பரிமேலழகர் இந்த

அன்பினாலே பின் துறக்கத்தைச் சென்றெய்தும் பேரின்பத்தினையும் உடன் காட்டிக் கூறுவர். அனைவர் உரைகளும் அன்பின் வழியாகப் பெறும் இன்ப ஏற்றத்தினையே குறிக்க அமைகின்றன. எனினும் வள்ளுவர் இந்த வாழ்விலேயே— இந்த உலகிலேயே—வையத்திலேயே— பெறும் இன்பத்தின் சிறப்பினை அன்பின்மேல் ஏற்றிச் சொல்லுகிறார் என்பது பொருந்துவதுதாகும்.

உலகில் இன்பமாக வாழவிரும்பும் ஒருவர் மற்றவரைத் தழுவிச் செல்லவேண்டும். மற்றவரிடத்து அன்பு காட்டாவிடின் உலகில் என்றும் அமைதியோடு வாழமுடியாது என்பதை வரலாறு காட்டுகிறது. அன்பு என்பது உற்றார் மாட்டு அன்றி மற்றுள்ளார் மாட்டும் செல்லும் உள்ள நெகிழ்வே என்பதை அதிகார வைப்பான் அறிகிறோம். எனவே, நம்மோடு தொடர்பு இல்லாதாரிடத்திலெல்லாம் அன்பு செலுத்தினால் நமக்கு எல்லோரும் உற்றவர் ஆவார்களன்றோ! அவ்வாறு உற்றவராயின் அவர்களால் நமக்கு விளைவது இன்பமே யன்றித் துன்பம் ஏது? எனவே இவ்வுலகில் இன்புற்றார் சிறப்பு எய்துகிறார்கள் என்றால் அதற்கு அன்பே அடைப்படை எனக் காட்டுகின்றார் வள்ளுவர். ‘அமர்ந்த’ என்பதற்கு ‘இல்லறத்தொடு பொருந்திய’ என்று பரிமேலழகர் உரை கூறுகின்றார். இதனால் அன்பு இல்லறத்துக்கு அமைந்தது எனக் கொள்ளினும் எல்லா உயிர்களுக்கும் இது பொருந்தும் எனக் கொள்ள வேண்டுவதே சிறந்தது.

இக்குறள் இல்லற இயலில் வைக்கப் பெறினும் இதனால் பெறுஞ் சிறப்பினை, ‘வையத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு”

என்றே வள்ளுவர் காட்டுகிறார். எப்படியாயினும் உலக இன்பத்துக்கும் அதனால் பெறுஞ் சிறப்புக்கும் அடிப்படை அன்பே என்பதை நன்கு விளக்குகிறார் வள்ளுவர் என்பது தெளிவு.

'வழக்கு' என்பதற்கு நெறியின் பயன் என்று கூறுகிறார் அவர். வழக்கு என்பது தொன்றுதொட்டு வரும் நெறிமுறை என அமைகின்றது. அன்பால் பெறும் இவ்வையச் சிறப்பு புதிதாக வந்துவிட்ட ஒன்று அன்று என்பதும், என்று வையம் தோன்றிற்றோ அன்று தொட்டே இவ்வழக்கு உண்டென்றும், என்று உயிரினம் தோன்றிற்றோ அன்று தொட்டே அறிந்தோ அறியாமலோ இந்த அன்பும் அதன் வழியாகப் பெறும் இன்பமும் தோன்றின என்றும் கொள்ளல் வேண்டும். 'வழக்கு' என்ற சொல்லின் பொருள் அப்போதுதான் சிறக்கும்.

இவ்வாறு உலகம் தோன்றிய நாள்தொட்டு வளர்ந்து வந்த அன்பின் உயர் சிறப்பைத்தான் வள்ளுவர் இந்தக் குறள்வழியே காட்டுகின்றார். இந்த அன்புதான் உலகை வாழவைக்கிறது என்பது வள்ளுவர் உள்ளக்கிடக்கை. ஆம்! அந்த அன்பின் அடிப்படையிலே பெறுகின்ற இன்பவழி உயரும் சிறப்பே சிறப்பு என்ற உண்மையை உணர்ந்து, உலகில் இன்பொடு கூடிய அந்தச் சிறப்பினைப் பெறுதற்கு நாம் அன்பினை இடையறாது போற்றி ஏற்றுக் கொண்டு வாழ வேண்டும். அன்புடையரானால் பிற மக்களுக்கிடையில் உயரலாம்—இன்புறலாம்—சிறப்பெய்தலாம். உயிரினம் —சிறப்பாக அறிவறிந்த மக்களினம்—இந்த அன்பின் வழியால் ஏற்ற முறுவதாக!

அறத்திற்கே

15-1-73

'அன்பின் வழியது உயிர்நிலை' என்பது வள்ளுவர் வாக்கு. எனவே, உலகில் உயிர் வாழ அன்பு இன்றியமையாதது. வாழ்விலிருந்து அன்பினை எப்படியும் பிரிக்க முடியாது. சிலரிடம் அன்பு வெளிப்படையாகக் காட்டப் பெறும்; சிலரிடம் மறைமுகமாக அமையும். எப்படியும் அன்பு உலகில் இல்லையானால் வாழ்வு இல்லை—வாழ்வு வறண்ட பாலைவனமாகத்தான் அமையும்.

இவ்வுலகில் மனிதன் இணைந்து வாழக் கடமைப்பட்டவனாகின்றான். அந்த இணைந்த வாழ்வில் அவன் நாள் தோறும் எத்தனையோ மக்களைச் சந்திக்க வேண்டியவனாகின்றான். அப்படிச் சந்திக்கின்ற அனைவரிடத்தும் அவன் அன்பினைச் செலுத்துகிறான் என்றோ அல்லது அத்துணை மக்களும் அவனிடம் அன்புடன் பழகுகிறார்கள் என்றோ சொல்ல முடியாது. சிலருக்குச் சிலர் உற்றவராக இருப்பர்; சிலர் மாறுபட்டவராக இருப்பர்; சிலர் இரண்டுமற்று நொதுமலராக இருப்பர். உலகில் இந்த வேறுபாட்டில் உற்றவரெல்லாம் அன்பால் பிணிக்கப்பட்டவர் என்றும் மற்றவர் அன்பால் வேறுபட்டவர் என்றும் நாம் நினைக்கிறோம். வள்ளுவர் உயர்ந்த உணர்வும் உள்ளமும் உடையவர் ஆதலின், இந்தக் கருத்திற்கு அப்பால் சென்று வேறுபட்டவரும் அன்பால் பிணிக்கப் பெறுவர் என்ற உண்மையை உணர்த்துகிறார்.

நமக்கு வேண்டியவர் என்றால் நம்மை அறியாமலேயே நாம் அன்பு செலுத்துகிறோம். சிலரிடம் நம் உணர்வு நம்மையும் மீறி அன்பினைப் பொழிகின்றது. அறத்தாறு

நிற்கும் இந்த அன்பு நெறி சிறந்த ஒன்றேயாகும். ஆனால் அந்த அளவில் அன்பு நின்றுவிடுவதன்று. அதன் எல்லை விரிந்த ஒன்று. அறத்தாற்றின் நெறி நின்று அதனை வளர்ப்பதற்காக மட்டுமன்றி, அறத்திற்கு மாறுபட்ட மறத்தின் வழி நின்று, அன்பு, அந்த மறத்தினையும் மாற்றும் திறம் வாய்ந்தது என்பதே வள்ளுவர் கண்ட உண்மை.

அறத்தாற்றில் நிற்கும் உற்றவரிடம் அன்பு செலுத்தப் பெறும் இயல்பும் அதனால் பெறும் சார்பு நிலை முதலியனவும் பயனும் உலகம் அறிந்தனவேயாம். ஆனால் மறத்துக்கும் இந்த அன்பே துணையாவதனை எண்ணிப் பார்க்கவேண்டும். வள்ளுவர்:

" அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை " **(76)**

என்பர்.

'ஒருவன் செய்த பகைமை பற்றி உள்ளத்து மறஉணர்வு நிகழ்ந்துழி, அவனை நட்பாகக் கருதி அவன்மேல் அன்பு செல்ல அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்கும் துணையாம் என்பார், மறத்திற்கு மஃதே துணை என்றார்' எனப் பரிமேலழகர் இதற்கு விளக்கம் கூறுகின்றார். பிறரும் "அவ்வன்பு மறஞ்செய்வார்க்கும் துணையாம்' என்றும் 'அறிவிலார் செய்யும் மறத்தையும் அன்பு வெல்லும்' என்றும் உரை கூறுகின்றனர். அனைத்தும் மாறுபட்ட பகை உள்ளத்தையும் இவ்வன்பு கட்டுப்படுத்தி, அப்பகையை மாற்றும் திறன் உடையது என்பதையே காட்டுகின்றன.

உற்றவனிடம் அன்பு செலுத்துவது உலகியல்; அது பற்றிய ஆய்வு தேவையில்லை. ஆனால் மற்றது எண்ணத் தக்கது. ஒருவன் நம்மொடு மாறுபடுகிறான் எனக் கொள்

வோம். அந்த மாறுபாட்டின் காரணத்தால் அவன் நமக்கு மறவழியில் கொடுமைகள் செய்ய நினைக்கலாம்—செய்தும் இருக்கலாம். அப்போது நாமும் மறவழியில் செல்ல லாகாது; அப்பொழுதும் நாம் அன்புடையவராக இருக்க வேண்டும். மறத்தால் தீங்கிழைப்பானை அன்பால் அழைத்து அணைக்கும் ஒரு பண்பு நம்மிடம் அரும்பினால் அந்த மறநெறியாளன் உள்ளமும் மாறும் என்பது உறுதி. 'தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதுதான் தலையாயவர் தங்கடன்' என்பது உண்மையாயினும் அதனினும் மேலாகத் தன்னை அடையாரிடம் அன்புகாட்டி நிற்பது சிறந்த ஒன்றாகின்றது. அந்த அன்பு அவன் மற உள்ளத்தைக் கரைத்து மாற்றும். அவன் சிந்திக்கத் தொடங்குவன். சிந்தனையில் அன்பின் திறம் தெளிவாகும். பின் அந்த மறச்செயல் பற்றி நிச்சயம் நாணுவான்; திருந்துவான்; செம்மை நெறியைப் பின்பற்று வான். உலகில் இந்த உண்மையை உணர்ந்தவர் சிலரே. ஆதலின், உணராதாரை 'அறியார்' எனக் காட்டினர் வள்ளுவர்.

எனவே அன்பு அறத்திற்கு உடன் நின்று, அதை வளர்க்கப் பயன்படுவதோடு மறத்திற்கும் உடன் நின்று அதை மாற்றவும் செய்கிறது. இத்தகைய உயர்ந்த அன்பு உலகில் செயல்வழிச் சிறக்குமானால் அறம் ஓங்கி மறம் மாய்ந்து மக்கள் வாழ்வு—உயிரின் வாழ்வு உயர்ந்தோங்கு மல்லவா? வள்ளுவர் அந்த வளமார் வாழ்வை எண்ணியே இந்தக் குறளை உலகிற்கு வடித்துத் தந்தார். நாமும் அவர் வழி நின்று,

" படர்செய் பகையும் உறவாக்கும் பற்றும் அளிக்கும்
மனைமைந்தர்
தொடர்பின் வளர்க்கும் அன்பதனால் சோர்ந்தும்
அன்பின் வழுவற்க " (விநா. அர. 22)

என்று அன்பில் வழுவாது வாழ்வை வளம்படுத்துவோமாக.

தெளிவி லதனை

7-2-1974

மனிதன் உலகில் எத்தனையோ செயல்களைச் செய்கிறான். அவற்றுள் பல அவன் உள்ளத்து உணர்த்த வகையில் அமைகின்றன. சில அவனை அறியாமலேயும் நிகழ்வதுண்டு. அவன் உணர்ந்து ஆற்றுகின்ற செயல்களிலும் பல அவனுக்கும் அவனைச் சேர்ந்தார்க்கும் பிறருக்கும் பயன் விளைப்பன வாகும்; சிலகேடு விளைப்பனவாக அமையினும் அமையும். எனவே ஆற்றலோடு கூடிய மனிதன் ஒரு செயலைச் செய்யுமுன் அது பற்றித் தானும் ஆராய்ந்து, தக்காரொடு சூழ்ந்து, அச்செயலால் யாருக்கும் தீங்கில்லா வகையில், வாழ்வில் நன்மை பயக்குவதாயின் அதனைச் செய்யலாம் எனவும், அல்லனவற்றை நீக்க வேண்டுமெனவும் அறிவோர் கூறுவர்.

தனி மனிதனுயினும் சமுதாய மாயினும், அன்றி, நாட்டினை ஆளும் நல்லவராயினும் இவ்வாறு தெரிந்து—சூழ்ந்து—ஆய்ந்து—அறிந்து ஒரு செயலை மேற்கொள்ளின் அது கருதிய பயனைத் தரும் என்பது ஒருதலை. இதனை எண்ணிய திருவள்ளுவர் அனைவருக்கும் பொது நோக்காகவும் அரசருக்குச் சிறப்பாகவும் இத் 'தெரிந்து செயல் வகை'யின் இன்றியமையாமையை விளக்கிக் காட்டுகின்றார். அரசியலில் ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் வல்லனுகிய அரசன் இவ்வாறு எண்ணிச் செயல்படானுயின், தானும் கெட்டு, அவன் வழியே இந்த நிலமும் துயருறும் என்பதை வள்ளுவர் சுட்டிக் காட்டி, அதனுல் அவன்

குற்றத்துக்கு—ஏதப்பாட்டிற்கு இலக்காக நேரிடும் எனவும் எடுத்துரைக்கிருர். செய்து குற்றம் எய்துவார் என்ற குறைபாட்டைக் காட்டாது, செய்யாது சிறக்கும் மேன்மையை விளக்கு முகத்தான்,

"'தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர்" **(464)**

எனக் காட்டுகிருர். ஆம்! மனிதன் குற்றத்துக்கு அஞ்ச வேண்டும். அஞ்சுவது அஞ்சாமை பேதைமை யன்றோ? அஞ்சத்தக்க குற்றங்களில் இந்த ஏதப்பாட்டையும் எண்ணிப் பார்த்த அவருள்ளமும் அஞ்சுகிறது. அவ்வாறு அஞ்சும் நல்லவர் தெளிவில்லாத அத்தகைய செயலைத் தொடங்கமாட்டார் எனத் திட்டமாகக் கூறுகின்றுர். ஆம்! தொடக்கமே இல்லை யாயின் செயல் எங்கே நிகழப் போகிறது? தன் இனத்தொடும் சான்றுரோடும் கூடி யாயினும் தனித்தாயினும் ஆராய்ந்து தெளிவு எய்தப் பெருத வினை, எதுவாயினும், அதனைத் தொடங்கக் கூடாது என்று அரசன் மேல் வைத்து, உலகில் வாழும் ஒவ்வொரு வரையும் செயல்பட ஆற்றுப்படுத்துகிருர் வள்ளுவர்.

ஒருவர் எதனையும் எண்ணுது காரியங்களைத் தொடங்கி, பின் அதில் தோல்வியுறின், அருகிலுள்ளவரும் மற்றவரும் அவ்வாறு தோற்றவரைக் கண்டு எள்ளி நகை யாடுவது உலகியற்கை. இன்றும் அத்தகைய நிலையில் மக்கள் உள்ளமையை நாம் அறிகின்றோ மல்லவா? அத்தகைய அவல நிலையை வள்ளுவர், 'இளிவு' என்று கூறு கிருர். இந்த 'இளிவு' என்னும் ஏதப்பாடு ஒருவனுக்கு வந்து சேரின், அவன் சாதாரண மனிதனுயினும் அன்றிப் பெரு மன்னனுயினும் தலை நிமிர்ந்து வாழ முடியாத ஒரு

நிலையை எய்துவான் என்பது உறுதி. சிற்றினஞ் சேராது, பெரியாரைத் துணைக்கொண்டு, காலம் இடம் முதலிய வற்றின் வலி தெரிந்து, தெளிந்து, சிந்தித்துச் செயலாற்று பவர் யாராயினும் வாழ்வில் எந்த ஏதப்பாட்டுக்கும் அஞ்சா நிலையில், எடுத்த காரியம் யாதினும் வெற்றி பெற்றவராகி வீறு நடைப் போட்டுத் திகழ்வர் என்பது உறுதி. எனவே தான் வள்ளுவர் அத்தகைய அதிகாரங்களை முன்னும் பின்னும் இருக்க அமைத்து, இடையில் 'தெரிந்து செயல் வகை' என்ற இந்த அதிகாரத்தையும் அமைத்து, ஒன்றன் பின் ஒன்றாக, அடுக்கிய குறட்பாக்களில் அச்செயல்வகையின் சிறப்பினைச் சுட்டிக் காட்டுகின்றார். ஆம்! இன்றைய இக் குறள் வழி உலகில் புகழ் பெற்று வாழ விரும்புவர் எதையும் தெரிந்து செயல்படத் தொடங்க வேண்டுமெனவும், அவ் வாறு தொடங்காதவர் இளிவென்னும் ஏதப்பாட்டுக்கு உள்ளாவர் எனவும் அறிகிறோம். உலகில் வாழும் யாரும் இளிவென்னும் ஏதப்பாட்டினை ஏற்க விரும்பார். எனவே செயலாற்றுவதே சிறந்த வழியாகும் என்பதை உணர்ந்து நாமும், நாம் ஆற்றும் செயல்பற்றித் தெளிந்து ஆய்ந்து நிமிர்ந்து வாழ, தெரிந்து பின் அறிந்து அதன் வழியே செயல்படுவோமாக!

வகையறைச் சூழாது

8-2-1974

உலகில் எப்போதும் மாற்றுச் சக்திகள் ஒன்றோடு ஒன்று மோதுகின்றன. அவை பெருஞ்சக்திகளாக இயங்கின், உலகமே நடுங்கத்தக்க பல கொடுமைகள் நிகழும். சிறியன வாயின் அதற்கேற்பக் கொடுமைகள் அமையும். தனிமனித

வாழ்விலும் இந்த மாற்றுச் சக்திகளின் இடையீடுகள் இல்லாமல் இல்லை. உளப் போராட்டம் வாழ்வியற் போராட்டம், அரசியல் போராட்டம், அனைத்துமே இம் மாற்று சக்திகளால் நிகழ்கின்றனவேயாம். இவற்றுள் எது விஞ்சுகிறதோ அதன் ஆதிக்கம் நாட்டில்—உலகில் அதிக மாவதை வரலாறு காட்டுகின்றது.

இரு அரசர்கள் மாறுபடும் காலத்து, ஒருவன் படை முதலிய வற்றில் மிக்கோனாக இருப்பினும், போர்மேற் செல்லுங்கால் நிகழும் திறங்களையெல்லாம் எண்ணாது— ஆராயாது—சூழாது—சூழ்ந்து முடிவு காணாது போர்ச் செயலைத் தொடங்குவனாயின், அவன், மாற்றான் சிறியவனா யினும், அவனுக்குத் தோற்றே நிலை கெடுவான். ஆயின், சிறியவனாகிய மாற்றான் வெல்லும் ஆற்றலை எங்ஙனம்— யாரிடமிருந்து பெற்றான்? மாற்றானாகிய முன்னவனே அவனுடைய சூழ்ந்து ஆராயாது செய்த செயலாலே, அவனை நன்கு வளரவிட்டவனாகின்றான். எப்படி?

விளைநிலத்தைச் செம்மையாக்கி, நல்ல பயிர் விளைக்கு முன் அப்பயிரினைப் பாத்தியி விட்டு, நீரிட்டு, எரு விட்டு, காவலிருந்து நாற்று விடுகின்ற முறை நாட்டில் யாவரும் அறிந்த ஒன்று. அந்த நாற்றின் செழுமையே அது தரப் போகும் விளைச்சலை நமக்கு அறிவிக்கும். ஆம்; இந்த உலகறி உண்மையை உவமையாக்கி, அந்த அறியா நிலையில் போர் தொடங்கும் மன்னவன் நிலையை நமக்கு உணர்த்துகிறார் வள்ளுவர். மாற்றானை வெல்லும் நெறிக்கு ஈர்த்துச் செல்லலும் நிலை—ஆயாது—சூழாது எழுகின்ற அரசன் செயல் ஆகும் என்பது வள்ளுவர் கருத்து.

நல்ல நிலத்தில் நல்ல பயிரை எல்லையிட்டுப் பாத்தியிலே வளர்த்து நாற்றாக்கி உயரவிடுவது போன்று, தன்னிலும்

வலி குறைந்த மன்னனைத் தன் வகையறச் சூழாத செயலால் பாத்தியிட்டு வளர்த்து, வெற்றி பெறும் செயலை வழங்கு கின்றான், தெரிந்து செயல்வகை அறியாத மன்னன் என் கிறார் வள்ளுவர். இதோ அவர் வாக்கு.

" வகையறச் சூழாது எழுதல் பகைவரைப்
பார்த்திப் படுப்பதோர் ஆறு " (465)

இக்குறள் வழியே வள்ளுவர், இக்குறள் அமைந்த அரசியலுக்கு ஏற்ப, அரச முறையை வற்புறுத்துகிறார் எனக் கொள்ளினும், இவ்வுண்மை அரச வாழ்விற்கு மட்டு மன்றித் தனிமனித வாழ்வுக்கும் பொருந்துவதாகும். உலக வாழ்வில் ஏறக்குறைய எல்லா நிலைகளிலும் மாற்றுச் சக்தியும் போராட்ட மனப்பான்மையும் வேறுபாட்டுணர்வும் போட்டியிடுவதை அறிவோம். அப்போராட்ட நெறி எங்கணும், இந்த உண்மை போற்றப் பெறல் வேண்டும். எச்செயலையும், எளிதாயினும்—வலியதாயினும் அதைத் தொடங்கு முன் எண்ணித் துணிய வேண்டும் என்று கூறும் வள்ளுவர், மாற்றுச் சக்தியை வெல்லத் தொடங்கும் ஒரு வினைக்குத் 'தெரிந்து செயல் வகை' இன்றியமையாதது என்பதை வற்புறுத்துகிறார். அவ்வாறு தெரிந்து சூழாது செயலாற்ற ஒருவன் தொடங்குவனாயின், மாற்றான் எத்துணை எளியவனாயினும், அவனை வெற்றி பெற வலிய னாக்கிய செயல், தொடங்கிய இவனையே சாரும் என்பது வள்ளுவர் துணிவு. உலக நிலையும் இதுதானே!

போர்ச் செயல் மட்டுமன்றி, வாழ்வின் மாறுபாடு களுக்கு இடையிலும் மனிதன் மேற்கொள்ள வேண்டிய எந்தச் செயலும் இந்த நியதிக்கு உட்பட்டதே யாகும். வள்ளுவர் ஒன்றை ஒரு பொருள் மேல் ஏற்றி, அதனை உலக

நெறியாகக் காட்டும் இயல்பின ரானமையின், இதை இயலுக்கு ஏற்ப அரசன்மேல் ஏற்றுவதாக உரை கொள்வது பொருந்தும் ஆயினும், இஃது அனைவருக்கும் பொருந்தும் பொது நெறியேயாம். எனவே நாம் மாறுபாட்டுக்கிடையில் செயல் தொடங்கும்போது, எண்ணி, ஆய்ந்து, சூழ்ந்து தொடங்க வேண்டுமெனவும், அவ்வாறு தொடங்கின் பகைவர் அல்லது மாற்றுக் கட்சியினர் அல்லது மாறுபாட்டினர் நிலை கெடுவர் எனவும் தெளிதல் வேண்டும். இன்றைய போராட்ட உலகில், மாறுபட்ட கொள்கைகள் நிலவும் உலகில் நல்லதை வாழவைக்கும் அறப்போர் தொடங்கும் ஒவ்வொருவரும் வள்ளுவர் காட்டிய இந்த வழியில் எண்ணிச் சூழ்ந்து தெரிந்து செயலாற்றின் நாடும் உலகும் நலம் பெறும் என்று கூறி அமைகிறேன்.

செய்தக்க அல்ல

9-2-1974

உலகில் பிறந்த மனிதன், தோன்றிய நாள் தொட்டு மறையும் வரையில் எத்தனையோ எண்ணற்ற காரியங்களைச் செய்து கொண்டேயிருக்கிறான். அவன் செய்கின்ற அத்தனையும் ஏற்கத் தக்கன வென்றோ அன்றி நீக்கத் தக்கன வென்றோ கொள்ள இயலா. அவரவர் செயலால் நலம் விளையும் நிலையும் உண்டு; அவலம் விளையும் நிலையும் உண்டு. எனவேதான் எந்தச் செயலைச் செய்தாலும் 'தெரிந்து செயல் வகை' இன்றியமையாதது என அறிஞர் வற்புறுத்துகின்றனர்-

வள்ளுவர் உலக மக்கள் இன்னின்னவற்றைச் செய்ய வேண்டு மெனவும் இன்னின்னவற்றை விலக்க

வேண்டு மெனவும் பல்வேறு குறட்பாக்களில் அறுதியிட்டுக் கூறுகின்ருர். அறநூல் பலவும் இந்தச் செயல் வகைகளை மக்களுக்கு ஆய்ந்து அறிவுறுத்துகின்றன. வையத்து வாழ் வாங்கு வாழும் ஒவ்வொருவரும் அவரவர் நிலை, இடம், காலம் இவற்றின் அடிப்படையில் சிலவற்றைச் செய்யவும் வேண்டும்; வேறு சிலவற்றை நீக்கவும் வேண்டும். செய்ய வேண்டுவனவற்றைச் செய்யாது விடுவதால் தீமைகள் நேர்வதும் உண்டு. எனவே இரண்டிடத்தும் எண்ணி எவற்றைச் செய்ய வேண்டும் எவற்றை நீக்கவேண்டும் என நினைந்து, உணர்ந்து, ஒவ்வொருவரும் செயல்படுவாராயின், இன்று நாட்டில் தோன்றும் எத்தனை எத்தனையோ கொடுமைகள் இல்லையாக நீங்கும். இந்த உண்மையை வற்புறுத்த நினைத்த வள்ளுவர், அரசியலில் அரசன் செய்ய வேண்டுவனவற்றையும் செய்யத் தகாதவற்றையும் முறையாக வகைப்படுத்திக் கூறுகின்ருர், பலவற்றைத் தொகுத்துக் காட்டிய பின், பொது நெறியாக இவ்வுண்மையை வற்புறுத்துகின்ருர்.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்" **(466)**

என்பது அவர் வாக்கு. இந்த இரண்டையும் பிணைத்த வள்ளுவர், முதலாவதாகச் செய்யத் தகாத காரியங்களைச் செய்வதால் உண்டாகின்ற கொடுமைகளைச் சுட்டுகிருர். சிலர்—மன்னர் மட்டுமன்றி பிற மக்களும்கூட—சில காரியங்களைத் தெரிந்து ஆய்ந்து எண்ணிப் பார்க்காது, தொடங்கித் தோல்வியுற்று, அதனுல் தாமும் கெட்டுப் பிறரையும் கெடுப்பதை உலக நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. இச் செயல்கள் தனிமனிதன் செயலாக அன்றி நாட்டுத் தலைவர்

அல்லது மன்னர் செயலாக அமையின் பல நாடுகளோ உலகமோ அல்லலுற்றுக் கெடு மல்லவா? இந்தப் பெருங் கொடுமையை எண்ணியே வள்ளுவர் இக்குறளை அரசியலில் 'தெரிந்து செயல் வகை' என்னும் அதிகாரத்தில் அமைத்து, மற்றைய அனைவருக்கும் அதன் பேருண்மையைத் தெளி வாகக் காட்டி அவர்களையும் தெளிந்து செயல்பட வைக்கிறார்.

செய்யத் தக்கவற்றைச் செய்யாமையால் உண்டாகும் கொடுமையினும் செய்யத் தகாதவற்றைச் செய்தலால் உண்டாகும் கொடுமையே அதிகமாகும் என்பது வரலாறு காட்டும் உண்மை. அமைதியாக வாழவேண்டிய—வாழ வைக்க வேண்டிய அரசனே அன்றித் தனி மனிதனே தான் செய்யலாகாது என அற நூல்கள் அறுதியிட்டவற்றைச் செய்யும்போதுதான் நாட்டில் போர்களோ குழப்பங்களோ குறைபாடுகளோ உண்டாகும் நிலை இன்றும் உள்ளது. ஆனால் அதே வேளையில் செய்யத் தக்க செயல்களைச் செய்யா மையால் அவ்வளவு தீங்கு உண்டாவதில்லை யல்லவா? இந்த நிலையை எண்ணித்தான் போலும் 'நல்லது செய்யா விட்டாலும் கெடுதல் இல்லை, அல்லதைச் செய்யாது இருங்கள்' என்று கருதி, 'நல்லது செய்தல் ஆற்றீ ராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' என்று பழம் புலவர் பாடிச் சென்றார். ஆம்! வள்ளுவர் இதை உள்ளத்தில் வைத்தே தான் முதலில் செய்யத் தகாதன செய்யுங்கால் நிகழும் கொடுமையைக் கூறி, பின் மற்றதை அதனோடு சார்த்திச் சொல்கிறார்.

இந்த நீதி அரசர்களுக்கு அமைந்த அதிகாரத்தொடு பொருந்தியதாக காட்டப் பெறினும், வள்ளுவர் கூறும் ஒவ்

வொரு அறநெறிக்கும்—அதிகாரத்துக்கும் இது பொருந்துவ தாகும். உலகமே இந்தக் குறள்வழி ஒழுகினாலன்றி உய்ய வழியில்லை. தனிமனித வாழ்விலே அவனவனுக்கென வரையறுத்த-செய்ய வேண்டியவற்றைச் செய்து அல்லனவற்றைச் செய்யாது வாழ்ந்தால் நாடும் நகரும் ஊரும் உலகமும் அமைதியாக இயங்கும் என்பது உறுதி. நாடாளும் நல்லவர்களும் அவர்கள் வழி இயங்கும் சமுதாயமும் இந்த உண்மையை உணர்ந்து செய்யத்தக்கவற்றைச் செய்து, அல்லாதனவற்றை அற நீக்கி வாழ்ந்து வையத்தை வாழ வைக்க வேண்டுமெனக் கேட்டு அமைகின்றேன்.

மடியுளாள்:

10-7-74

திருவள்ளுவர் தாம் சொல்ல வந்த கருத்தினை எளிமையாகவும், அதே வேளையில் வேடிக்கையாகவும் கேட்போர் மனத்தில் பதியும் படியாகவும் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் வாய்ந்தவர். அவருடைய கருத்துக்களை மக்கள் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டிய வழியை அவரே அறிவார். 'சொலல் வல்லன் சோர்விலன்' என்ற அவர் தொடர் அவருக்கே பொருத்தமாக அமைவது. அஞ்சியாகிலும் அன்பு பட்டாகிலும் மக்கள் தாம் சொல்லும் கருத்தினை ஏற்று நடந்தால் போதும் என ஒருவேளை அவர் எண்ணியிருப்பார். எனவே சில செயல்கள் செய்யாமையால் வரும் கொடுமைகளைக் காட்டி அச்சுறுத்துவர்; அப்படியே நற்செயலால் வரும் ஆக்கத்தைக் காட்டி ஆசை கொளச் செய்வார்; அவற்றை வேடிக்கையாக விளக்கவும் செய்வார். இத்தகைய குறட்பாக்கள் பல - அவற்றுள் ஒன்று இன்று நாம் காண இருப்பது.

வள்ளுவர் மனிதனுக்கு வேண்டிய ஊக்கமுடைமையைக் காட்டி, வேண்டாத 'மடி'யினைச் சுட்டி, சோம்பல் இன்றி ஊக்கத்துடன் உழைக்க வேண்டும் என்று முன்னர் விளக்கினர். எனினும் பல்வேறு காரணங்களாலும் ஊழைப் பற்றிய நிலையிலும் ஊக்கமுடைமை வெற்றியுருதோ என ஐயுறுவாருக்கும், ஊக்கம், மடி இவை இரண்டினையும் இணைத்துப் பார்த்துப் பயன் காண நினைப்பாருக்கும் 'ஆள்வினை யுடைமை' என்ற அதிகாரத்தினையும் அமைக்க

வழி கோலியுள்ளார். வினையின் அருமை நோக்கி அச்சமுறு வாரைத் திருத்த முற்பட்டு, அஞ்சாது தன் வினையாற்று வான் பெறும் சிறப்பையும் ஆற்ருதான் பெறும் அவலத்தை யும், தனக்கென இன்பம் விழையாத தாளாண்மையால் வினையாற்றுவான் பெறும் ஏற்றத்தையும் சுட்டிக் கொண்டே வந்த வள்ளுவர், இன்றைய குறளில் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் அடிப்படையாக உலகு கருதும் இருவர் மேல் தம் கருத்தை ஏற்றித் தெளிய வைக்கிருர், வேடிக்கை யான முறையில்.

' மூதேவி சென்றிருந்து வாழ்வாளே......
மன்ருேரம் சொன்ஞர் மனே '

என ஔவையார் மூதேவி குடிபுகும் வீட்டிற்கு இலக்கணம் கற்பித்தார். வள்ளுவர், அவன் ஒருவேளை அந்த வீட்டை விட்டு விலகவும் கூடும் என்னும் கருத்தால் அவன் அடி மடியிலேயே கை வைத்துக் கருத்தை விளக்குகிருர். ‘மடி’ என்ற சொல்லுக்கு உரிய இரு பொருள்களையும் இங்கே கொள்வோர் உளங்கொள வேடிக்கையாக விளங்க வைக்கிருர். ‘பூனையை மடியிலே கட்டிக் கொண்டு சகுனம் பார்ப்பது’ என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. மடி ஒருவனு டைய உரிமையான - மற்றவர் எளிமையாகப் பற்ற இயலாத - பிரிக்க முடியாத இடம். அதிலேயே மூதேவி சென்று தங்குவாள் என்கிருர். யார் மடியில்? ‘மடியுடை யான் மடியில்’ - ‘மடி’ என்ருல் சோம்பல் என்பது பொருளல்லவா? ஆம். மடியுடையான் மடியில் அவ்வாறு தங்கும் அவளை ‘மா முகடி’ என்றே பரிகசிக்கிருர் வள்ளுவர். அவள் மடியில் சேர்ந்தால் அவன் வாழ்வ தெங்கே? உலகில் வாழப் பிறந்தவன் சோம்பலின் காரணத்தால் இப்படி மடியலாமா? அதிலிருந்து விடுதலை இல்லையா? ஏன் இல்லை?

அடுத்த அடியிலேயே வள்ளுவர் அந்தக் கொடுமையிலி ருந்து விடுதலைக்கு வழி காட்டுகிறார். மடியிலாதான் மூதேவியை விரட்டுவதோடு, செல்வத்துக்குரிய சீதேவியை யும் தனக்கு உரிமையாக்கிக் கொள்கிறான். ஆம்! இலக்குமி மடியற்ற ஆள்வினை உடையான் தாள் உறைந்து அவன் காலாலிட்ட பணியைத் தலையால் செய்வாள் என்ற குறிப் பினையே 'மடியிலான் தாள்உளாள் தாமரை யினாள்' என்கிறார். 'தாள் உளாள்' என்ற தொடரால் தாளாண்மை யுடையான் வழி நிற்பாள் என்றும் அவன் செல்வத்தால் பெறும் செயலின் சிறப்பையும் அரியளாய அவளைப் பெற்ற எளிமையையும் வள்ளுநர் வற்புறுத்துகிறார். எனவே ஆள்வினையோடு வினைக்கு அஞ்சாது - சோம்பி இராது, தன் முயற்சியால் செயலாற்றும் ஒருவனை வறுமையும் சிறுமையும் பற்றா என்பதையும் அதே வேளையில் செல்வமும் சிறப்பும் அவ்வாள்வினை யுடையான்கண் தாமே வந்து அமைந்து, வாழ்வின் நலமனைத்தையும் நல்கும் என்பதையும் இக்குறள் வழியே திட்டவட்டமாகக் காட்டுகிறார் வள்ளுவர். இதே அவர் வாக்கு,

" மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள் " **(617)**

உலகில் நலமெலாம் பெற்று நல்வாழ்வு வாழ விரும்பு பவர் ஆள்வினை உடையராய்ச் சிறப்பராக! அவர்வழி நாடு நல முறுவதாக!

பொறி யின்மை

11-7-74

ஒரு வீட்டில் இரண்டு பிள்ளைகள் இருந்தனர். இருவரும் ஒரு தேர்விற்குச் செல்ல வேண்டியவர்கள்; சென்றார்கள். ஆயினும் இருவரும் அத்தேர்வில் வெற்றி

பெறவில்லை. ஆனால் தேர்ச்சியில் வெற்றி பெருமைக்குப் பெற்றோர் அவ்விருவரையும் பழிக்கவில்லை. மாறாக ஒருவனைப் பழித்தனர் - ஒருவனைப் பாராட்டிப் போற்றினர். ஏன் இந்த வேறுபாடு? பெற்ற பிள்ளைகள் இருவரையும் ஏன் அவர்கள் ஒத்துக் காணவில்லை? காரணம் ஒன்றே.

பிள்ளைகளுள் ஒருவன் தனக்கு ஏதோ கெட்ட காலம் என்றும் தனக்கு ஆகூழாகிய நல்விதி கிடையாதென்றும் சொல்லிக் கொண்டு அத்தேர்விற்கு யாதொரு ஆயத்தமும் செய்யாது - படிக்காது - வீணாகப் பொழுது போக்கித் தேர்வுக்குச் சென்றான். ஆனால் மற்றவனோ தனக்கு ஆகூழ் இல்லையாயினும் முயன்றால் - ஆள்வினை யுடைமையால் ஆவன செய்யின் வெற்றி யடையலாம் என்ற நம்பிக்கையில் தேர்வுக்குரிய முயற்சியில் ஈடுபட்டு நன்கு படித்தான். ஆயினும் அவனும் வெற்றி பெறவில்லை. எனவே பெற்றவர் சோம்பலைத் துணையாகக் கொண்டு தூங்கிய முன்னவனைப் பழித்துப் பின்னவனை 'அவன் என்ன செய்வான்? முயன்றான்; வெற்றி பெறாதது அவன் குற்றமில்லை' எனப் பாராட்டினர். வாழ்க்கையின் எல்லாத் துறைகளுக்கும் இந்த உண்மை பொருந்தும். அதனாலேயே வள்ளுவர்,

" பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி " **(618)**

எனத் திட்ட வட்டமாகக் கூறியுள்ளார்.

'பொறி' என்ற சொல்லுக்கு விதி, புண்ணியம், தெய்வ உதவி எனப் பலவகையில் பொருள் கொள்ளலாம். 'உறுப்புக்கள்' என்றும் பொருள் கொள்வர். எனினும் முன் காணும் பொருள்களே சிறப்புடையன. அடுத்த குறளில் விதி அல்லது தெய்வ அருள் இன்றேனும் முயன்றால் வெற்றி

யுறலாம் என்ற கருத்தை வலியுறுத்த நினைத்த வள்ளுவர் அதற்கு முதற்படியாக அக்கருத்துடைய குறளை இங்கே வைக்கிறார். எனவே விதி மாறாக இருப்பினும் இடையறாது முயல வேண்டும் என்றும் அதனால் விளையும் பயன் பற்றிக் கவலை யுறாது நம் கடமை 'முயற்சி' என்றே செயலாற்ற வேண்டும் என்றும். ஒருவேளை அம்முயற்சி வெற்றி வாய்ப்பைத் தேடித் தரும் என்றும், தராவிட்டாலும் வளர்ச்சி உண்டு என்றும் இக்குறளில் வள்ளுவர் சுட்டிக் காட்டி, அடுத்த குறளில் அவ்வுண்மையைத் தெளிய வைக்கிறார்.

மனித வாழ்வில் மட்டுமன்றி உயிரின வாழ்விலும் முயற்சியே வளர்ச்சியைத் தருகின்றது. நம்மால் முடியாது என்று எண்ணியோ அன்றி நமக்கு வெற்றி பெறும் நல்ஊழ் இல்லை என்றோ கருதி ஒவ்வொருவரும் எச்செயலையும் செய்யாமல் வாளா இருப்பராயின் உலகம் முன்னேற முடியுமா? முடியா தன்றோ? எனினும் அவ்வாறு எண்ணிக் கொண்டே வீண் பொழுது போக்கும் மடியாளர்கள் இன்று நம்மிடை வாழ்வதை நாம் காண்கின்றோம் - வள்ளுவர் காலத்திலும் இருந்திருப்பார். அதனாலேதான் வள்ளுவர் ஆள்வினையுடைமையை வற்புறுத்தும் முகத்தான் இதனால் முற்றிய பயன் இன்றேனும் பழி இல்லை என்பதையும் அத்துடன் வளர்ச்சி உண்டு என்பதையும் இக்குறள் வழியே சுட்டிக் காட்டுகிறார்.

ஒரு செயலைச் செய்ய முயலுபவன் எடுத்த எடுப்பி லேயே வெற்றி பெறுவான் என்று சொல்ல முடியாது. சில வேளைகளில் தோல்வியும் பெறுவான். ஆனால் அத்தோல்வி யில் வெற்றியின் முதற்படி அமைந்திருக்கும் உண்மையினை யும் அதனால் தான் பெற்ற வளர்ச்சியினையும் அவன்

அப்போது அறிய முடியாது. மேலும் மேலும் அதே வகையில் தன் ஆள்வினை உடைமையால் முயன்று இறுதியிலே வெற்றி காணும்போதுதான் அவன் அந்த உண்மையை உணர முடியும். ஒருவேளை அவன் வெற்றியே பெறு விட்டாலும் அவன் வினையாற்றலை முறையாகக் கண்டு வந்த உலகம் அவன் தோல்வியைப் பழிக்காது பாராட்டும் என்பது உறுதி. எனவேதான் வள்ளுவர் எங்கோ கண்ணுக்குப் புலப்படாத விதி ஒன்றன்மேல் பழி வைத்துச் சோம்பி இருப்பதை விட, தன்னிடம் உள்ள - தானே உற்றறியும் - வினையாற்றும் அளவறிந்து நம்பிக்கை வைத்துச் செயலாற்றுபவன் என்றாயினும் ஒருநாள் வாழ்வில் வெற்றியடைய முடியும் என்று திட்டமாகக் கூறுகிறார். ஆம்! நம்மிடம் உள்ள வினையாற்றலை - ஆள்வினை உடைமையின் திறனை அறிந்து செயலாற்றின் எடுத்த காரியம் யாவினும் ,வெற்றி பெறுவோம் என்பது உறுதி!

தெய்வத்தான்

12-7-1974

ஆள்வினை யுடைமையின் ஆக்கத்தைப் பல வகையான் வற்புறுத்துகின்ற வள்ளுவர் அவற்றின் உச்சியில் இக் குறளால் வினையுடையான் பெறும் வெற்றியைச் சுட்டிக் காட்டுகின்றார். ஊழ் வழியாலோ அன்றித் தெய்வத் துணையின்மையாலோ வெற்றி கிட்டாது என்ற ஒரு நிலையிலும், ஒருவன் தன்வினை வழிச் செயலாற்றித் திண்ணிய உளத்தால் அவ்வினையினை மேற்கொள்வானாயின், அவன் அச் செயலில் வெற்றி பெறுவான் என்பது வள்ளுவர் உள்ளக்

கிடக்கை. ஒருவேளை தெய்வம் அவனுக்கு உதவ வேண்டா என்று எண்ணியிருந்தாலும் அவனுடைய ஆள்வினை யுடைமையினையும் தளரா முயற்சியினையும் கண்டு, தன் எண்ணத்தை விட்டு அவன் வெற்றி பெற வழி காட்டும் என வள்ளுவர் கருதுகின்றார். இக்கருத்தினை வேறு வகையில் குடிசெயல்வகை என்னும் அதிகாரத்தில், 'தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்' எனக் காட்டுவர். ஆகவே வள்ளுவர் கருத்து, முயற்சி தெய்வத் திறனையும் வென்று தன் செயலில் வெற்றி யளிக்கும் என்பதாகும். தெய்வம் என்பதற்குக் கடவுள் என்பாரும் வினை அல்லது ஊழ் என்பாரும் புண்ணியம் என்பாரும் உளர். எப்படியாயினும் அவற்றின் நிலைகளுக்கு மேலே ஆள்வினை உடைமையின் திறனை ஈண்டு வள்ளுவர் சுட்டிக் காட்டுகின்றார். அடுத்த குறளிலே 'ஊழையும் உப்பக்கம் காண்பார்' என்றும் முந்திய குறளில் 'பொறியின்மை யார்க்கும் பழியன்று' என்றும் வள்ளுவர் ஊழினைச் சுட்டிக் காட்டுகின்றமையின், ஈண்டு அவ்வூழினுக்கும் அதற்கும் காரணனுன மனிதனுக்கும் பிற அனைத்துக்கும் முதலாக உள்ள தெய்வத்தினையே இந்தக் குறளில் குறித்தார் என்று கொள்வது பொருத்த மானதாகும்.

இதனால், ஒரு சிலர், இப்படிக் கூறினால் மனிதன் தெய்வத்திலும் மேம்பட்டவனாக எண்ணத் தக்க நிலையில் வள்ளுவர் வாழ்ந்தார் எனக் கொள்ளலாம் அன்றோ எனக் கூறலாம். எண்ணிப் பார்த்தால் அதற்கு இடம் இல்லை. தெய்வம் அனைத்திற்கும் மேம்பட்டது; அப்பாற் பட்டது என்பது வள்ளுவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை. ஆனால் தான் சோம்பியிருந்து, அச்சோம்பலுக்குக் காரணம் ஆண்டவனே அன்றி விதியோ என்று காட்டித் தப்பித்துக்

கொள்ளுபவரை இடித்துரைத்துத் திருத்தவும், தெய்வ நம்பிக்கை யுடையாரும் தம் ஆள்வினை உடைமையையும் நம்பிச் செயலாற்றிச் சிறக்கவுமே வள்ளுவர் இக்குறளை வைத்திருக்கிருர்.

'தெய்வத்தான் ஆகா தெனினும்' என்ற தொடர் வழி வரும் 'உம்மை' யாலேயே மேற்கொள்ளும் செயல் முற்றும் ஆகாத ஒன்றன்று என்பதையும், தெய்வம் தன் படைப்பின் கீழ் உள்ளவர்தம் ஆக்கத்துக் கன்றி அழிவுக்கு வழி காட்டாது என்பதையும் வள்ளுவர் சுட்ட நினைக்கின்ருர். தம் செயற் குறைவாலும் சோம்பலாலும் ஒருவன் வீணே இருந்து அதற்குத் தெய்வத்தைத் துணை தேடும் கொடிய வழக்கம் இன்றும் நாட்டில் இருக்கிற தல்லவா? இந்த நிலையில் உள்ளவரைப் பார்த்தே வள்ளுவர் இக்குறளைச் சொல்லியுள்ளார்.

வள்ளுவர் 'ஆள்வினை உடைமை' பற்றிக் கொண்ட கருத்து மிகத் திண்ணியதாகும். உலகில் பிறந்த ஒருவன் தன்னைச் சோம்பலுக்கு உள்ளாக்காது, தன் உள உரத்தை யும் உடல் உரத்தையும் நம்பி, எந்தச் செயலைச் செய்ய முயன்ருலும் அதில் வெற்றி பெறுவான் எனத் திட்டமாக அவர் நம்புகிருர். அவ்வாறன்றி வினை, ஊழ், தெய்வம் இவற்றைக் காட்டிச் சோம்பி யிருப்பின், அத்தெய்வமே அவனுக்குத் துணை நிற்காது எனவும் நம்புகிருர். ஊழ் இன்றேனும் உர நிலையில் நின்று வினை செய்வானுக்கு அத் தெய்வம், தானே வந்து உதவும் என்றும் நம்புகிருர். அதனுலேயே,

" தெய்வத்தான் ஆகாத தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும் " **(619)**

என்கிருர்.

'மெய்வருந்தக் கூலி தரும்' என்பதற்கு உடல் வருந்தும் அளவிற்காவது பயன்விளையும் எனச் சிலர் கொண்டாலும், வள்ளுவர் அக்கருத்தில் சொல்லியிருக்க மாட்டார் என்றே தோன்றுகிறது. ஆள்வினை உடைமையால் முயல்கின்ற ஒருவன் உறுதியாக எடுத்த காரியத்தில் முற்றும் வெற்றி பெறுவான் என்பதே அவர் அசைக்க முடியாத நம்பிக்கை. நாமும் அவர் நம்பிக்கைக்குப் பாத்திரமாக ஆள்வினையுடையராகி வாழ்வில் வெற்றி பெறுவோமாக!

மிகச் செய்து

18-1-75

'உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்' என்றும், நெஞ்சத்து அகநக நட்பது நட்பு' என்றும் உள்ள உற வாடலே நட்புக்கு இன்றியமையாது வேண்டப்படுவது என்று வற்புறுத்தி, 'நட்பு' என்னும் அதிகாரத்தில் காட்டிய வள்ளுவர், இங்கே கூடா நட்பு என்ற அதிகாரத் தில் 'நட்பினுள் சாப்புல்லற் பாற்று' என்று சொல்லுகிருர். மனத்துக்கண் மாசிலா உயர் அறத்தை உலகுக்கு உணர்த்திய வள்ளுவரா இப்படி உள்ளொன்று வைத்துப் புறமொன்று காட்டி நடிக்கச் சொல்கிருர் என்று எண்ணத் தோன்றும். இந்த அதிகாரத்தின் தலைப்பே 'கூடா நட்பு' என்பதாகும். தீ நட்பினைத் தனியாகக் கூறுபடுத்திக் காட்டிய வள்ளுவர், உளத்தால் கூடாத நட்பினையே ஈண்டு வற்புறுத்துகிருர். அரசியலில் மாற்ருர் எந்த வகையினும் தம்மைக் கவிழ்க்கச் சதி செய்வது என்ற நிலை வரலாறு காட்டும் உண்மையாதலானும், உலக நிலையில் உள்ள எல்லா வகைத் தன்மைகளையும் வள்ளுவர் காட்ட விழைந்தமை யானும், நல்லாரொடு நட்பினைச் செய்து அவர் துணையால் நாட்டையும் உவகையும் நலம்படுத்தும் அரசர், கூடா நட்பு வலிய வந்து சேரின் என் செய்ய வேண்டும் என்பதையே ஈண்டு வற்புறுத்துகிருர். இந்த நிலை சிறப்பாக அரசர் மேல் ஏற்றிச் சொல்லப் பெறினும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உலகில் மிக்கிருக்கும் நிலையில் வாழும் நமக்கும்—பொது மக்களுக்கும் ஏற்ற ஒன்ருகவே இதைக் கொள்ள வேண்டியுள்ளது.

'பகையாளியின் குடியை உறவாடிக் கெடு' என்ற பழமொழி நாட்டின் பழைய மொழி; வாழ்வில் கொள்ள வேண்டிய மொழி என்று அறிந்தோர் கூறுவர். இந்நிலை ஏற்புடைத்தாகுமா? ஆம்! எண்ணிப் பார்த்த வள்ளுவர் ஏற்புடைத்தாகும் எனவே சொல்லுகிறார். ஆனால் ஒருவனோ அன்றி ஓர் அரசனோ தானே அந்த உள்ளொன்று கொள்ளும் கள்ள நிலைக்குச் செல்ல வேண்டுமென்று வள்ளுவர் சொல்லவில்லை. ஆனால் மாற்றான் எனக் கருதப் பெறும் ஒருவன்—நம் வாழ்வும் வளமும் கண்டு அழுக்காறு கொண்டு நம்மை அழிக்க நினைக்க வரும் ஒருவன்—மனத்திலே கரவடமும் உதட்டிலே புன்னகையும் கொண்டு வருவானாயின் அவனைக் கண்டு ஏமாற்றம் கொள்ளலாகாது. எனவேதான் ஈண்டு வள்ளுவர் எச்சரிக்கை செய்கிறார். அவ்வாறு ஏமாறுபவர் தாமும் கெட்டு, தம் உற்றாரையும் நாட்டையும் அல்லலுக்கு உட்படுத்துவது உறுதியன்றோ? அதனால்தான் மாற்றான் கொள்ளும் புது உறவினால்—புன்னகையினால்—ஏமாற்றம் கொள்ளாது அவனைப் போலவே நடித்து அவனை வெற்றி கொள்ளவேண்டும் என்கிறார் வள்ளுவர்.

> 'மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
> நட்பினுள் சாப்புல்லற் பாற்று' (829)

என்பது வள்ளுவர் வாக்கு. 'பகைமை தோன்றாமல் புறத்தின்கண் நட்பினை மிகச் செய்து அகத்தின்கண் தம்மை இகழும் பகைவரை, தாமும் அந்நட்பின்கண்ணே நின்று புறத்தின்கண் அவர் வாழும் வண்ணம் செய்து அகத்தில் அது சாம்வண்ணம் அது பொருந்தல் பான்மை யுடைத்து அரச நீதி' என்று பரிமேலழகர் விளக்கம் தந்து அதுதான் அரச நீதி என்கிறார். ஆம்! அரசியலில் இன்று மட்டுமன்றி

என்றென்றும் இத்தகைய ஒரு சூழல் இருந்து கொண்டிருப்பதை எல்லா நாட்டு வரலாறுகளும் நமக்கு உணர்த்துகின்றனவே. எனவே, மாற்றான் மறைந்து—உளம் மறைத்துச் செயலாற்றும்போது நாடாளும் நல்லவர்கள் ஏமாற்றத்தால் தம் நல்ல பண்பாட்டுவழி ஒழுகுவார்களாயின் அவர்களால் நாட்டுக்கு நன்மை செய்ய முடியாது. இதனாலேயே வசிட்டர் இராமனை நோக்கி,

" பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பில் தீரா
நகையுடை முகத்தை யாகி இன்னுரை நல்கு நாவால் "

என்று அறமுரைக்கின்றார். இதில் வசிட்டர் அக் கூடா நட்பின் தன்மையை நன்கு சுட்டிக் காட்டி விட்டார். நகையுடை முகம் காட்டி - உள்ளொன்று வைத்து மறைத்து முகத்தில் புன்சிரிப்பினைக் காட்டி விடவேண்டும் என்கிறார். மற்றும், நாவால் இன்னுரை நல்கு என்று கூறி, அதனினும் உளத்தில் செயல் வேறுபட்டது என்பதையும் விளக்கி விட்டார். ஆம்! மாற்றார் கொடுமையை—வஞ்சகத்தை வஞ்சகத்தினால் சாய்ப்பதே சிறந்த முறை. இது அரசியலுக்கு மட்டுமன்றித் தனிமனித வாழ்வுக்கும் பொருந்தும் அதிலும் இன்றைய சூழ்நிலையில் முற்றும் பொருந்தும். எனவே நாம் கூடா நட்பின் வழியில் செல்லாது, அவ்வாறு நட்பால் வரும் மாற்றலரை வெல்லும் ஒரு கருவியாக இச்செயலைக் கொள்ளுதலே மனிதப் பண்பு என்பது வள்ளுவர் கருத்து. நாமும் எச்சரிக்கையாக இருந்து, அவர் வாய்மொழியைப் பின்பற்றி வாழ்வோமாக!

பகை நட்பாம்

19—1—75

'நட்பினுள் சாப்புல்லற் பாற்று' என்று மாற்றாரை மாற்றும் படையாக - புறத்துத் தோன்றாப் படையாக முந்திய

குறளில் சுட்டிக் காட்டிய வள்ளுவர், அந்த நிலையை என்றும் கைக்கொள்ளலாமா என்ற வினவிற்கு இன்றைய குறளில் பதில் தருகிருர், உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும் என்பதுதான் வள்ளுவர் கருத்து; அறநெறியும் அதுதான். ஆனுல் மாற்ருன் ஏமாற்ற நினைக்கும் நிலைக்கு மாற்று மருந்தாகவே முந்திய குறளை வள்ளுவர் குறித்தார். ஆயினும் அதுவே மேல்வரிச் சட்டமாக—என்றும் எதற்கும் என்ற வழியாகக் கொள்ளக்கூடாது என்று காட்டவே இந்தக் குறளில் 'விடல்' என்று காட்டி, அந்த நிலையை மேற் கொண்ட செயல் முடிந்ததும் விட்டுவிட வேண்டும் என்று வற்புறுத்துகிருர்.

முந்திய குறளில் 'மிகச் செய்து தம் எள்ளுவாரை' யார் என வள்ளுவர் காட்டாவிடினும் இங்கே 'பகை நட்பாங் காலம் வருங்கால்' என்று திட்டமாகவே பகையினைச் சுட்டிக் காட்டுகின்ருர்:

> " நட்புப் பிரிதல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
> பக்கத்தார் யாவரையும் ஐறுதல்—தக்கார்
> நெடுமொழிக் கோறல் குணம்பிறி தாதல்
> கெடுவது காட்டும் குறி "

என்று 'பகை நட்டலை'க் கெடுவது காட்டும் குறியென அறிந்து வைத்தும் அக்கெடுதலை நீக்க வழி சொல்லாது வள்ளுவர் வாளாயிருக்க முடியுமா? 'முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்' என்ற நம் பழமொழிக்கு ஏற்பவே வள்ளுவர் இக்குறளை—இந்த அதிகாரத்தினை நமக்காக எழுதியுள்ளார்.

> " பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
> அகநட் பொரீஇ விடல் " (830)

என்பது இங்கே நாம் காணும் வள்ளுவர் வாக்கு. கூடா நட்பின் இறுதியாகிய இக்குறளை வள்ளுவர் எண்ணி எண்ணி நம் முன் வைக்கிறார்.

'பகை நட்டல்' கெடுவது காட்டும் குறியாதலால் அது வாராதிருத்தலே சிறந்தது என்பது வள்ளுவர் கருத்து. ஆனால், நல்லவர் நினைப்பதன்படி நடப்பதுதான் உலக வரலாற்றில் இல்லையே. அதனால்தானே எல்லாத் தீமைகளும் விளைகின்றன. வள்ளுவர் நல்ல உள்ளம் 'பகை நட்பாதல்' போன்ற புறநிலைக் காட்சி கூடாது என்று விரும்புகிறது. ஆனால்—வந்து விட்டால்?—அதை ஏற்று முறியடிக்க வேண்டியது நல்லவர் செய லல்லவா? அதனால்தான் வள்ளுவர், 'பகை நட்பாங் காலம் வருங்கால்' என்று சுட்டு கிறார். வாராதிருக்கவேண்டு மென்பதே அவர் அவா. ஆனால் வந்து விட்ட பிறகு அதை முறியடிக்க 'முகநட்டு அகநட் பொரீஇ' நிற்கவேண்டும் எனச் சுட்டுகிறார். மாற்றானைப் போல முகத்தில் நகைகாட்டி, உளத்தில் நட்புச் செய்யா திருக்கவேண்டும் என்கிறார். இவ்வாறு இவ்வதிகாரத்தில் வள்ளுவர் சுட்டும்போது, மாற்றானை அழிக்க வழி காட்டும் கொடுமையை எண்ணவோ மேற்கொள்ளவோ தூண்ட வில்லை. ஆனால் உளத்தால் நட்டு நாம் கெடாது எச்சரிக்கை யாக இருக்கவேண்டும் என்பதையே அவர் வற்புறுத்து கிறார். ஆகவே இது வள்ளுவர் தற்காப்புக்கு வகுத்த வழி யன்றி வேறன்று.

இத்தலைகய இருவேறு வகைப்பட்ட அகப் புற நிகழ்ச்சிகள் எப்போதும் இருக்கவேண்டுமா என்ற வினா விற்கே இறுதிச் சொல்லால் பதில் தருகிறார் வள்ளுவர். 'விடல்' என்பது அவர் ஆணை. ஆம்! அம்மாற்றான் வஞ்ச கத்தை அதே வஞ்சகத்தால் வென்ற பின் அதை எண்ணி

இருப்பின் யாது பயன்? அது தேவையற்றதும் கூட. எனவே அரசியலுக்குச் சிறப்பாகவும் வாழ்வியலுக்குப் பொதுவாக வும் வள்ளுவர் காட்டிய இக்குறட்பாவில் மாற்ரூர் ஏமாற்று நிலையை வெல்லும் வகையைச் சுட்டி, அந்த ஏமாரு நிலையில் நாம் தற்காப்பிட்டு வெற்றி பெற்றபின் அந்த இருவகைப் பட்ட நிலைகளையும் அடியோடு விட்டு மனித உளத்தோடு வாழவேண்டுமெனச் சுட்டுகிருர். இன்றைய உலகில் வாழும் நாம் அவர் வாய்மொழியைக் கொண்டு மாற்ருர் இருப்பின்— அவர் நட்புச் செய்ய நினைப்பின்—எச்சரிக்கையாக இருந்து நம்மையும் நம் சமுதாயத்தையும் தற்காத்துப் பின் அவற்றை அடியோடு விட்டு, மறந்து தூய நெறியை மேற்கொண்டு துலங்குவோமாக!

பேதமை என்பது

20-1-75

நாடாளும் நல்லவர்களுக்கு இன்றியமையாது வேண்டப் பெறும் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் பற்றித் தெளிவு பெறச் சொல்லிய வள்ளுவர் அவற்றை யெல்லாம் மேற்கொள்ள வேண்டிய அரசியலாரையும் அல்லாத பொது மக்களையும் எண்ணிப் பார்க்கிருர். வள்ளுவரும் அவரை ஒத்த அறநெறி அறிஞர்களும் வகுத்துச் சொன்ன வாழ்வியலை மக்களினம் பின்பற்ருத காரணத்தால்தானே இன்று நாட்டிலும் உலகிலும் எல்லாக் கொடுமைகளும் நடைபெறுகின்றன. அன்றும் இந்த நிலையில் மக்கள் சென்றதைக் கண்டிருப்பார் அவர். 'அந்தோ இத்துணை வகையில் வாழ்வியலைத் தெளிவுபடச் சொல்லி யும் மக்கள் இவற்றை வாழ்வில் மேற்கொள்ளாது அல்ல

ஓறு கின்றனரே' என்று அவர் உள்ளம் நைந்திருக்கும். இவ்வாறு விளக்கிருக்க மின்மினிக்காக அலையும் - நெல்லிருக்க உமி குற்றும் - யானைக் கொம்பிருக்க முயற்கோடு தேடும் மக்களைக் கண்டு வருந்த, அவர்தம் அவல நிலைக்கு யாது காரணமாகலாம் என அவர் உள்ளம் எண்ணிற்று. அவர் கண்ட முடிவு 'பேதமையே அம்மக்களைத் திசை மாற்றுகின்றது' என்பதுதான். எனவேதான் இங்கே ஆறு அங்கங்களை அடுக்கிச் சொன்ன பிறகு - பேதைமையைப் பற்றிச் சொல்லத் தொடங்குகிறார். இந்த முதற் குறளிலேயே அதன் கொடுமையை நினைந்த வள்ளுவர்,

" பேதைமை யென்பதொன் றியாதெனின் ஏதங்கொண்
டூதியம் போக விடல் " **(831)**

எனச் சுட்டிக் காட்டுகிறார். இந்த உண்மை இவரைப் 'பொய்யில் புலவர்' எனப் போற்றிய சாத்தனார் வாக்கால் நன்கு விளக்கப் பெறுகின்றது.

" பேதமை என்பது யாதென வினவின்
ஓதிய இவற்றை உணராது மயங்கி
இயற்படு பொருளால் கண்டது மறந்து
முயற்கோடு உண்டெனக் கேட்டது தெளிதல் "
(மணிமேகலை)

என்பது அவர் வாக்கு. சாத்தனார் சமய நெறிவழி இதைச் சுட்டினாலும், ஈண்டு வள்ளுவர் குறளுக்கு ஏற்ற வகையிலேயே இவ்வடிகள் பொருள் கொண்டு அமைகின்றன. வள்ளுவர் கூறிய அங்கங்களை உற்று உணராது மயக்க முற்று, வள்ளுவர் கூறிய இயற்படு பொருள்வழிக் காண்பதை மறந்து, யாரோ சொல்லிய 'ஆகாயப் பூ' 'முயற்-

கோடு' என்று இல்லதைப் பற்றி ஏமாற்றமுற்று அழிவதே பேதைமையாகும். இச்செயலுக்குக் கல்லாதவனாயினும் ஒருவேளை மன்னிப்பினைப் பெறலாம். எல்லாவற்றையும் கற்று இப்படி உற்றது உணராது ஒழியும் பேதைக்கு உய்தி உண்டோ? எனவேதான் 'பேதைமை யென்ப தொன்று' என்று சொல்லி ஒன்று என்ற சொல்லான் அதன் கொடுமைக்கு அதுவே நிகர்; வேறு ஒன்று கிடையாது எனச் சுட்டிக் காட்டி விட்டார். இதற்கு உரை கூற வந்த பரிமேலழகர், 'ஒருவனுக்கு ஏனைக் குற்றங்கள் எல்லாவற்றி லும் மிக்கது' என விளக்கி, இதன் கொடுமையின் உச்ச நிலையினை விளக்குகிறார்.

இப்படி இப்படி வாழ்ந்தால் தாமும் இன்புற்று வையத் தையும் வாழ வைக்கலாம் என்ற வாய்மொழிகளை யெல்லாம் நன்கு கற்றும், 'ஏதங் கொண்டு ஊதியம் போக விடும்' - கேடு பயப்பனவற்றைக் கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடும் கொடுமையை எண்ணி எண்ணி நைந்த வள்ளுவர் உள்ளம் இந்தக் குறளை முதலில் உலகர்முன் வைக்கிறது. இதைத் தொடர்ந்து இப்பேதைமையின் இயல்பு, நிலை. செயல், பயன் ஆகியவற்றைச் சொல்லிக் கொண்டே செல் கிறார் வள்ளுவர்.

கல்லாதவரையோ பிறரையோ பேதை என்று வள்ளுவர் கருதவில்லை; உண்மையும் அதுதான். ஆனால் வள்ளுவர் போன்றார் சொல்லியவற்றை யெல்லாம் கற்றும் பிறர்க்கு உரைத்தும் தாம் அடங்கா அற்பர்களையே வள்ளுவர் பெரும் பேதை என்கிறார். எனவே உலகம் செம்மை நெறியில் செல்ல வேண்டுமானால் எல்லாக் கொடுமைகளுக்கும் காரணமான இந்தப் பேதைமை -

கற்றும் அறியாத கயமை - உலகை விட்டு நீங்க வேண்டும். நீங்குமா? இன்று உலகில் நடக்கும் கொடுமைக்கெல்லாம் காரணம் கற்றவர்தாமே! எனவேதான் வள்ளுவர் நாடு வாழ - நானிலம் வாழ இப்பேதைமை நீங்க வேண்டும் என்ற கருத்தில், இக்குறள் வழி அதன் தன்மையை நன்கு விளக்கி விட்டார். நாமும் அவர் குறளை நாடொறும் கேட்பதன் பயனாகப் பேதைமை நீங்கித் தெளிந்து, செய்வ தறிந்து. செயலாற்றி, நல்வழியினை மேற்கொண்டு நாட்டினையும் நானிலத்தையும் வாழ வைக்க முயல்வோமாக.

அறு சுவை

28-9-75

சமுதாய வாழ்வே இலக்கியங்களுக்கு நிலைக்களன் அம்மொழியில் வாழும் இலக்கியங்களும் இந்த அடிப் படையிலேயே அமைகின்றன. எப்பொருளையும் இலக்கியம் சமுதாய அடிப்படையிலேயே காட்டுவது மரபு. கல்வி, அறம், அறிவு, தவம் எதுவாயினும் அவற்றின் அடிப் படைகள் யாவும் சமுதாயத்தைை வாழ வைக்கும் குறிக் கோளிலேயே சென்று அமைகின்றன. இந்த உண்மை யினையே 'தாமின் புறுவது உலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்' என்றும், 'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்து அறன்' என்றும், 'அறிவினுள் எல்லாம் தலை என்ப தீய செறுவார்க்கும் செய்யா விடல்' என்றும், 'உற்றநோய் நோன்றல் உயிர்க் குறுகண் செய்யாமை அற்றே தவத்துக்கு உரு' என்றும் வள்ளுவர் விளக்கிக் காட்டியுள்ளார், ஆம்! அத்தகைய வள்ளுவர் தம் குறளொற்றி வந்த 'நாலடி நானூறும்' அந்த அடிப்படையிலேயே சமுதாய வாழ்வை ஒட்டிச் செல்லுகின்றது. கடந்த 1330 நாட்களிலும் குறளின் வாழ்வியலைக் கண்டு, கேட்டு, இன்புற்ற, நீங்கள் இன்று முதல் நானூறு நாட்களுக்கு நாலடி காட்டும் சமுதாய நெறியைக் காண இருக்கின்றீர்கள்.

நாலடியின் முதற் பாடலே மக்கள் எப்படி வாழ வேண்டும் என்ற உண்மையைச் சுட்டிக் காட்டுகின்றது. உலகவாழ்வுக்கு இன்றியமையாதது செல்வம். அப் பொரு

ளான் நலம் கண்டு காதன் மனையாளுடன் தனக் கெனவும் உலகுக் கெனவும் வளமார் இல்லற வாழ்வினை நடத்துவதே சமுதாய வாழ்வில் முன்னிற்பது. சில செல்வர்கள் இந்த அடிப்படை உண்மையினை மறந்து விடுகின்றனர். தம் முடைய நேற்றைய நிலையினையும் தம்மினும் செல்வத்தின் மிக்காரா யிருந்தார் கண்முன்னே நிலை கெட்டு நலிந்த நிலை யினையும் கண்டும் கேட்டும், சிலர் தாம் 'என்றும் செல்வராய் வாழ்வோம்' என்று தருக்கி, உலகில் பல கொடுமைகளைச் செய்கின்றனர். இவ்வுண்மை வெறும் பொருட் செல்வத் தினுக்கு மட்டும் பொருந்தாது, பிற அனைத்துக்கும்—கல்வி. அதிகாரம், பதவி, பட்டம், அரசியல், பிற சமுதாய அடிப் படைகள் அனைத்துக்கும் பொருந்தும். எனினும், ஒரு சில நாட்களே வாழும் இந்த மனித வாழ்வுக் கிடையில்— சிறிது காலமே பெற்ற இச் செல்வத்தைக் கொண்டு செய்வன செய்து சமுதாயத்தைச் செம்மைப்படுத்த நினைக்காத சிலர், அச் செல்வத்தால் சமுதாயத்தை அழித்து நசுக்கும் கொடுமைகளைச் செய்ய முற்படுகின்றனர். ஆனால் உலக வரலாறு அவ்வாறு முயல்வார்தம் முடிவு என்னுகிறது என் பதைச் சுட்டிக் காட்டிக் கொண்டே இருக்கிறது. இலக் கியமும் இந்த உண்மையை என்றும் வாழும் நிலையில் சுட்டிக் காட்டுகிறது. நாலடியாரின் முதல் அதிகாரம் 'செல்வ நிலையாமை'. இவ்வதிகாரத்தின் பத்துப் பாடல்களும் செல்வம் நிலையா அவல நிலையினை எடுத்து விளக்கி, அதனால் மனிதன் மனிதனாக வாழவேண்டிய உண்மை நிலையினை எடுத்துக் காட்டுகின்றன.

அதன் முதல் பாட்டு, அச் செல்வத்தினையும் அதனால் பெறும் வளமார் இல்லறத்தினையும் சுட்டிக் காட்டி, அச் செல்வத்தில் புரளுவோர் நிலை தடுமாறிக் கெடுங் காலத்தில்

அன்றாட உணவுக்கும் கூழுக்கும் பிறரிடம் கையேந்தி நிற்கும் காட்சியினையும் படம்பிடித்துக் காட்டி, இந்த நிலையில் நிலையாச் செல்வத்தைப் பெற்ற ஒவ்வொருவரும் பெற்ற செல்வத்தால் தாமும் வாழ்ந்து மற்றவரையும் வாழவைக்க வேண்டும் என்ற உண்மையினை உணர்த்துகின்றது. இதோ அந்தப் பாட்டு:-

' அறுசுவை உண்டி அமர்ந்துஇல்லா ளூட்ட
மறுசிகை நீக்கி உண்டாரும் – வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்தில் கூழெனில் செல்வமொன்
றுண்டாக வைக்கப்பாற் றன்று ' (நாலடி 1)

இதனால் ஆசிரியர் இல்லற வாழ்வில் இல்லாள் வழியே பெறும் இன்ப வாழ்வினைச் சுட்டி, அதற்கு மூலமான செல்லத்தையும் காட்டி, அத்தகைய பெருஞ்செல்வமும் நிலை கெடும் என்பதை 'உண்டாக வைக்கப்பாற் றன்று' என உணர்த்தி, ஆகவே பெற்ற செல்வத்துறு பயன் 'கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்தல்' என்பதையும் வற்புறுத்துகின்றார். ஆம்! இன்றைய நம் பாரத நாடும் அதன் அரசாங்கமும் இந்த உண்மையினையே சட்டங்கள் மூலம் வற்புறுத்துகின்றன. இதை இன்னும் நம் நாட்டுச் செல்வரும் உலகத்தவரும் உணரவில்லை. உணர்ந்தால் நாடு நாடாகும்; மனிதன் மனிதனாக வாழ்வான். செல்வர் இந்த நாலடியின் வழியே மனம் திருந்தி, செம்மை நெறியில் வையம் வாழ - அதன் சமுதாயம் வாழ, செல்வத்தை வாரி வழங்கி, உலகை வாழ்வித்துத் தம்மையும் புகழால் என்றும் வாழ வைத்துக் கொள்வார்களாக!

துகள் தீர்

29—9—75

உலக வாழ்வில் மக்கள் பெறும் செல்வம் நிலையற்ற ஒன்று என்பதை யாவரும் அறிவர்; சிலர் உணர்வர்; சிலர் தெளிந்து செயலாற்றுவர். ஆயினும் சிலர் என்றென்றும் அச்செல்வமும் செல்வாக்கும் தமக்கு இருக்கும் என்று எண்ணிக் கொடுமைகள் இழைப்பர். அதே வேளையில் சிலர் இந்த நிலையாத செல்வத்தின் தன்மையைக் காட்டி, "இச் செல்வத்தையும் அது அழியும் வாழ்வையும் விட்டு ஓட வேண்டும்' என்று துறவு நெறியைக் காட்டுவர். இவை இரண்டும் மனித சமுதாயத்துக்கு ஏற்றவை அல்ல என்பதையும் நிலையாச் செல்வத்தைப் பெற்றவர் என்ன செய்ய வேண்டும் என்பதையும் நாலடியார் நன்கு வற்புறுத்துகின்றது.

பெரும் பொருள் திரட்டும் செல்வரைக் கூப்பிட்டு அரசாங்கம், 'உங்கள் தேவைக்குமேல் உள்ளவற்றுள் ஒரு பகுதியை வரியாகத் தாருங்கள். அதைக் கொண்டு உங்களுக்கும் சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கும் ஆக்க வழிகளை அமைக்கப்போகிறோம்' எனக் கேட்கிறது. ஆயினும் பலர் அந்த வேண்டுகோளை ஏற்காத காரணத்தினாலேயே அவசரச் சட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன. செல்வம் பெற்றவர் தாமே முன்வந்து பெற்ற செல்வத்தை மற்றவரோடு பகிர்ந்து உண்ணப் பழகுவார்களானால் நாட்டில் எந்தக் கொடுமையும் இருக்க வழி இல்லை. அரராங்கமும் அவசரச் சட்டங்களைப் புகுத்தாது. சாதாரணச் செல்வராயினும்—அளவோடு வளம் பெற்றவாயினும் தம் வாழ்க்கைக்கே வரவு போதவில்லை என

வாதிடலாம். அத்தகையோருக்கு அரசாங்கமே வரி விலக்கு அளிக்கிறது. ஆனல் பெருஞ்செல்வர் நிலை?—

அத்தகைய பெருஞ்செல்வரை அழைத்துத்தான் நாலடியார் அறம் உரைக்கின்றது. 'பெருஞ் செல்வம் பெற்ற மனிதா! நின்று நினைத்துப் பார். நீ பெற்ற செல்வம் சக்கரத்தின் கால் போன்றது. நாளையே நீ ஏழையாகலாம். எனவே பெரும் பொருள் பெற்ற இக்காலத்திலேயே அச்செல்வத்தை மற்றவரோடு பகிர்ந்து கொண்டு, அப்பல்லாரோடு உண்டு வாழ். அது உனக்கும் நன்மை, உலகுக்கும் நன்மை' என்று சமுதாய வாழ்வின் அடிப்படையை வற்புறுத்துகின்றது. இதோ அந்த நாலடி:—

" துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டும்
பகடு நடந்தகூழ் பல்லாரோடு உண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும் " (நாலடி—2)

'பல்லாரோடு உண்க' என ஆணையிடுகின்றார் ஆசிரியர். 'இல்லையானல் என்னுகும்?' என்ற வினவிற்கு விடையைச் சற்றே வன்மையாக அடுத்த பாடலில் சொல்லுவார். அதை நாளை காண்போம். இங்கே 'செல்வம் சகடக்கால் போல வரும்' என்று அதன் நிலையினையும் 'அகடுற' என்று அதன் பொதுத் தன்மையினையும்—வேறுபாடற்று யாரிடத்தும் ஒத்த நிலையில் இருந்தும் பிரிந்தும் செல்லும் தன்மையினையும் சுட்டிக் காட்டி, ஆகவே 'பல்லாரோடு உண்க' என்கின்றார். ஆம்! இந்த எச்சரிக்கையாம் அவசரச்சட்ட நிலைக்கு முற்பட்ட பதட்ட நிலையினைக் கேட்டு வாழாவிட்டால் 'நாளை நம்மிடம் இல்லை' என்பதை அந்த அவசரச் சட்டங்கள் அறிவிக்கும்.

'பகடு நடந்த கூழ் பல்லாரோடு உண்க' என்பதில் ஆசிரியர் இருபொருள்பட வைக்கிறார். பகடு என்பதற்கு மாடு என்ற பொருள் கொண்டு, உழவால் பெற்ற கூழாம் உணவினைப் பலரோடு உண்க என்கின்றார். பகடு என்ப தற்கு யானை என்றும் பொருள் கொண்டு, 'யானையெருத்தம் பொலியும்' ஆளும் நிலையில் கொண்ட பெருஞ் செல்வத்தை யும் அதன் வழிப்பெறும் கூழாம் உணவினையும் பல்லாரோடு உண்க எனவும் காட்டுகிறார். எனவே எந்த வகையில் பெரும் பொருள் பெற்றாலும், பெற்ற பொருளை மற்றாரோடு பகிர்ந்து தாமும் உண்டு வாழ்வதுவே சமுதாய நெறி என் பதை நாலடியார் உணர்த்துகின்றது. 'செல்வம் நிலையாதது; அதை விடுத்துக் காடு செல்க' என்று துறவை வற்புறுத்தாது, அவ்வுருண்டோடும் செல்வத்தால் உலகை உய்விக்கும் உயரிய சமுதாய நெறியைக் காட்டுகிறார் சமண முனிவர். ஆம்! இந்த உண்மையினை இன்றும் உலகம் உணராத காரணத்தாலேயே நாடும் உலகமும் நலிவுறுகின்றன. அவசரச் சட்டங்கள் உண்டாகின்றன. நல்லவரும் வல்ல வரும் செல்வரும் செல்வாக்கு உள்ளவரும் நாலடியாரைப் பின்பற்றும் வகையில், பெற்ற செல்வத்தால் ஆவன செய்யின் நாடு நாடாகும்; உலகம் உய்யும். நம் நாடு இன்று அந்த நல்ல நெறியை நோக்கிச் செல்ல முயல்கிறது. வெற்றி பெற்று அந்த நெறி வழி நாடும் நானிலமும் சிறக்கும் என்ற உணர்வில் மகிழ்வோமாக!

யானை எருத்தம்

30—9—75

மக்கள் பல்வேறு வளங்களைப் பெற்று வாழ்கின்றனர். அவற்றுள் பொருட் செல்வ வளம் ஒன்று—தலையாயது.

பொருளாலும் அதன் வழியே பெறும் பிற வளங்களாலும் வாழ்கின்ற மக்கள், எப்படி வாழ வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கக் கடமைப் பட்டவராவர். அவ்வாறு எண்ணின் பல நல்ல உண்மைகள் புலனாகும். அந்த உண்மைகளை உணர்ந்த நல்லவர், சென்ற காலத்தையும் எதிர்காலத்தையும் எண்ணி, தம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தை நோக்கி, தம் வாழ்வும் வளமும் வையத்தை வாழவைப்பதற்கென்பதை உணர்ந்து செயலாற்றுவர். அதனால் வையமும் சிறக்கும்; சமுதாய வாழ்வும் செழிக்கும். ஆயினும் பலர் தாம் பெற்ற செல்வம், செல்வாக்கு, அரசியல் வாழ்வு ஆகியவற்றைத் தம்மையும் தம்மைச் சார்ந்தாரையும் வளர்த்துக் கொள்ளவும் பிற தன்னலச் செயல்களுக்கும் பயன்படுத்துவர். அதனாலேயே உலகில் எண்ணற்ற கொடுமைகள் நிகழ்கின்றன.

இத்தகைய கொடுமையாளர்களை உலக வரலாறு எச்சரித்துக்கொண்டே இருக்கிறது. கடந்த சில நாட்களில் உலகில் நம்மைச் சுற்றி நடைபெறுகின்ற—நடைபெற்ற நிகழ்ச்சிகள் உள்ளத்தை நடுங்க வைக்கின்றன. நேற்று ஆட்சியில் அமர்ந்து ஆணை செலுத்தியவர் இன்று சிறையில் தள்ளப் பெறுகின்றார்; நாடு கடத்தப்பெறுகிறார்; ஏன்?— குடும்பத்துடன் கொல்லவும் படுகிறார். இவற்றுலெல்லாம் நாம் அறிந்து கொள்ளும் பாடம் ஒன்றே யாகும். ஆம்! மனிதன் மனிதனாக வாழவில்லை என்பதே!

செல்வம் பெற்ற காலை அச்செல்வத்தை மற்றவரோடு பகிர்ந்து வாழின் நாட்டின் நலம் பெருகும் என்ற உண்மையினை—மனித வாழ்வின் அடிப்படையை—நாலடியார் நன்கு சுட்டிக் காட்டுகின்றது. ஆயினும் வல்லவராகக் கருதிக் கொள்ளும் சிலர் அந்த அறிவுரையை ஏற்க மறுத்தபோது

அதனால் விளையும் தீமையினையும் அது சுட்டிக்காட்டு கின்றது. ஆம்! கொடுமைகளி லெல்லாம் கொடுமை தன் மனையாளை மாற்றான் கொண்டு செல்வதாகும். கற்பு நெறி யினைக் கண்ணெனப் போற்றிய தமிழ்ச் சமுதாயம் இதைக் கொடுமையாகக் கருதியது வியப்பில்லை யல்லவா! இந்த உண்மையினையே நாலடியார்,

> " யானை எருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
> சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
> வினைஉலப்ப வேறாகி வீழ்வர் தாம்கொண்ட
> மனையாளை மாற்றாள் கொள் " (நாலடி—3)

என்று எடுத்துக் காட்டுகின்றது. யானை எருத்தத்து அமர்ந்து குடை நிழலில் பவனி வருதல் அன்றைய அரச வாழ்வின் சின்னமாகக் கருதப்பட்டது. அவர்கள் சேனைத் தலைவராகத் திகழ்ந்தார்கள்; அடக்கி ஆண்டார்கள். சேனைத் தலைவர் சிலர் தம்முடைய செல்வ ஆட்சியிலே, தம்மை மறந்த நிலையில் தவறு இழைத்துச் சமுதாயத்தை நசுக்கத் திட்டமிட்டுச் செயலாற்றினர்—செயலாற்றுகின் றனர். அவர்களை எச்சரிக்கிறார் சமண முனிவர். இந்த எச்சரிக்கை அன்று மட்டு மன்றி இன்றும் வேண்டப்பெறு கின்றது. 'தலைவனே! நில்! நினைத்துப்பார்! உன் வினை உலந்தால் தூக்கி எறியப்படுவாய்! உன் அழகிய மனைவி மாற்றானுக்கு அடிமையாவாள்!' என்று சுட்டிக் காட்டுகிறார் சமண முனிவர். வினை என்ற சொல்லுக்கு அவனுக்கு மக்களாலோ அன்றி மரபு நிலையாலோ அளிக்கப் பெற்ற உயர்நிலைதரும் செயல் என்ற பொருளும் உண்டு; அவனு டைய மாறுபட்ட செயல் என்ற பொருளும் உண்டு; அவனு டைய 'ஊழ்' என்ற பொருளும் உண்டு. எப்படி யாயினும் பொருளாலும் பிறவற்றாலும் தருக்கி ஆளும் தகவிலார்

அப்பொருள் இழந்து, பதவி இழந்து, மான மிழந்து. மதிகெட்டு, மனைவியையும் மாற்றான் கொளக்கெட்டொழி வர் என்பதை இப்பாடல் சுட்டிக் காட்டுகின்றது. ஆம்! பெருந் தலைவர் நிலையே இதுவாயின் மற்றவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ!

இன்று தம்மை மறந்து தருக்கி வாழ்வோர் பெருகி விட்டமையாலேயே நாட்டிலும் உலகிலும் அவல நிலை அதிக மாக உள்ளது. எனவே இன்று இந்நாலடி மிகவும் இன்றிய மையாது வேண்டப்பெறுகின்றது. இந்த நாலடியை உணர்ந்து திருந்தி வாழ வேண்டிய நிலை இன்றியமையாது மேற்கொள்ளவேண்டிய ஒன்று. மக்கள் இந்த உண்மையை உணர்ந்து வாழின் நாடும் நானிலமும் செழிக்கும். அத்தகைய ஆக்க நெறிக்கு வழிகோலி வையத்தை வாழவைக்கும் வகை யில் இந்த நாலடியின் அறம் உணர்த்தும் அதிகாலைப் பேச்சு வரிசை அமைகின்றது! இதன் வழி வையம் சிறப்பதாக! மனிதன் மனிதனாக வாழ நாலடி காட்டும் நல்வழியை நாம் பின்பற்றி உய்ந்து உயர்வோமாக! வணக்கம்.

அறிமின் அறநெறி

17—3—76

நாலடியின் ஆசிரியர்கள் உலக நிலையாமையைப் பற்றி அடிக்கடி சுட்டிக் காட்டினாலும், இவ்வுலகில் வாழவேண்டிய இன்றியமையாமையினையும் வற்புறுத்தத் தவறவில்லை. அவ்வாறு வாழும் நிலையில் உலகியலை இன்பமாக்க வேண்டிய சில உண்மைகளையும் எடுத்துரைக்கின்றனர். அவற்றுள் ஒன்றே நல்லினஞ் சேர்தல். 'நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்' என்ற ஔவை மொழிக் கேற்ப, நல்ல—அல்லலற்ற வாழ்வினை நாம் மேற்கொள்ளவேண்டின் நல்லவர் உறவைக் கொள்ளல் வேண்டுவதாகும். அவ்வுறவினை ஏன் கொள்ளவேண்டு மென்பதையும் கொண்டால் பெறும் பயன் யாது என்பதையும் பலவிடங்களில் வற்புறுத்தும் நாலடியார் ஈண்டும்—இன்றைய பாட்டிலும் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

உலகில் பிறந்தார் அறநெறியே பற்றி வாழக் கடமைப் பட்டவர். ஆம்! அவ்வாறு வாழ்ந்தால் வர இருக்கும் கூற்றுக்கு அவர்கள் அஞ்சி வாழ வேண்டுவதில்லை. அறத்தாறு வாழ்வாரைக் கூற்றுவன் அல்லல் படுத்தமாட்டான் அல்லவா? எனவே அறத்தாறு வாழப் பழக வேண்டும் என்பது உண்மை. ஆனால், எது அறம்? பலவகையில் பலர் சுட்டுவர். இங்கே ஆசிரியர் ஒரிரு அற நெறிகளைச் சுட்டு கிறார். ஆம். அவையே பொறுமை, வஞ்சக மின்மை, தீநட்பு நீங்கல் முதலியன, இவையே நம்மை அறத்தாற்றில் உய்க்கும் என்பது உண்மை, 'பொறுமின் பிறர் கடுஞ்சொல்'

என்கின்ருர். பிறர் கடுஞ் சொல்லைப் பொறுக்கும் ஆற்றல் எளிதன்று. என்றும் 'மிச்சத்தைப் பின் சொல்வேன். சினத்தை முன்னே வென்றிடுவீர் மேதினியில் மரணமில்லை' என்ற பாரதியின் வாக்குப்படி, சினம் நீங்கிப் பொறையுடையனுதலே தலையாய மனிதப் பண்பு. அடுத்து 'வஞ்சம் போற்றுமின்' என்கின்ருர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வஞ்சக நெறி வராமல் பாதுக்காக்க வேண்டும் என்ற நிலையினையே 'போற்றுமின்' என்ற சொல்லால் புரியவைக்கின்ருர். 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என வள்ளலார் வேண்டுகிருரே! இவை இன்றேல் தாஞகத் தீயார் நட்பு நீங்கிவிடும். முடிவில் நல்லவர் உறவு வந்து அமையும். பெரியவர் நட்பினைப் பெற்று அவர்தம் வாய்ச் சொற்களைக் கேட்டு நடக்கும் நிலையினை, பிறந்தார் ஒவ்வொருவரும் பெறுவராஞல், பிறகு உலகு 'இன்ன தம்ம' என்ற நிலைமாறி, இனிய பூஞ்சோலையாகத் திகழும். இப்பாட்டில் நல்லவருடன் சேர்வதோடு 'பெரியார் வாய்ச்சொல் பெறுமின்' என்றே வற்புறுத்துகின்ருர். அதனுல் தீயார் நட்பு தாஞக நீங்கும். எனினும் ஆசிரியர் நல்லவர் வாய்ச்சொல் பெறுமுன் தீயார் நட்பு நீங்கியாக வேண்டும் என வற்புறுத்துகின்ருர். சில வேளைகளில் நல்லவர் தம் உபதேச மொழிகளெல்லாம் தீயவர் சேர்க்கையால் பயனற்றுப் போவதைக் காண்கின்ருே மன்ருே? இக்கொடுமை நேரா திருக்கவே, இந்தப் பாட்டில் முதலில் தீயார் கேண்மையை விலக்கிவிடச் சொல்லுகிருர். ஆம்! இருட்டு நீங்கிஞலன்ருே ஒளியின் பயன் விளையும். தீநட்பாகிய இருட்டு நீக்கியபின் நல்லவர் தம் வாய்மொழியாகிய கதிர்கள் நம் உளத்தில் புகுந்து, நம் வாழ்வை ஒளிமய மாக்கும். அதற்கு முன்பே சில கொள்ளா

வேண்டியவற்றையும் சில தள்ளவேண்டியவற்றையும் மேலே இரண்டு அடிகளில் சுட்டிக் காட்டுகின்றார். மனிதன் மனிதனாக வாழ—இன்று உலகை இனியதாக்க உள்ள நல்ல நெறியிலே, இப்பாடல் நம்மையெல்லாம் ஆற்றுப் படுத்து கின்றது. இதோ அந்தப் பாடல். படித்தார் பயன் பெறுவர்! வையம் பயன் பெற்றுச் சிறக்க இதனினும் சிறந்த வழியில்லை,'

" அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதியார் கேண்மை என்றொன்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல் " (18-2)

ஆம்! என்றும் பெரியார் வாய்ச்சொல் பெற்றுப் பயன் துய்ப்போமாக!

அடைத்தார் பிரிவும்

18–3—76

வாழ்க்கை நல்லதாக அமையவேண்டும் என்பதே அனைவருடைய விருப்பமாகும். யாரும் வாடவேண்டும் என வரம் கேட்பதில்லை. துன்பம் நீங்கி இன்பம் பெறவே எல்லா உயிர்களும் விரும்புகின்றன. சிலர் தம் இன்பம் கருதி, மற்றவர்களுக்குத் துன்பம் இழைக்கும் அளவிற்கும் முன்னேறிச் செல்வர். இதனால் மற்றவர் மட்டுமன்றி, முடிவில் அவர்களே துன்பத்துக் குள்ளாவர். அதற்கிடையில் இயற்கையாக வரும் இன்னல்களும் பல. நமக்கு உற்றார் எனச் சொல்லிக் கொள்பவர் சொல்லாமல் கொள்ளாமல் உலகைவிட்டே நீங்கி விடுகின்றனர். தாம் போற்றிய

உடலும் பொருளும் உற்றாரும் மற்றாரும் இருக்க, அவர் மறைகின்றனர். இந்த இயற்கை நிலை மாற்றமுடியாத ஒன்று. மற்றும், வாழும்போதும் நாம் நம் உடல் நிலைக்கு ஏற்பப் பல்வேறு பிணிகளில் பட்டு உழல்கிறோம். வாழ்க்கைச் சூழலில் வந்து மோதும் கேடுகள் பல. இத்தனைத் துன்பங் களுக் கிடையில் வாழும் மக்கள், உலகம் 'துன்பம் நிறைந்தது' என விலக்கி எங்கும் ஓடுவதில்லை—ஏங்கே ஓடுவது? ஓடவும் முடியாது. ஆனால் அந்தச் சூழலுக்கு இடையிலே 'இன்னா தம்ம இவ்வுலகம், இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே' என்று அறங்கூறும் நல்ல நெஞ்சங்கள் அன்று முதல் இன்று வரையில் நம்மிடையே உலவுகின்றன. துன்பத்தில் இன்பம் காணுதலே உயர்தோர் வாழ்வு. 'இடுக்கண் வருங்கால் நகுக! அதனை அடுத் தூர்வ தஃதெப்ப தில்' என்று என்று வள்ளுவர் காட்டியபடி துன்பத்தில் சிரித்தும் சிந்தித்தும் வாழ்பரே நல்லவர். அவர்கள் அறநெறி போற்றி, அஞ்சுவது அஞ்சி வாழும் அறிவினர் ஆவர். அவர்கள் வாழ்வின் சோதனைகளி ளெல்லாம் வெற்றி பெற்று உயர்கின்றவராவர். எல்லாச் சமயங்களிலும் சமுதாயங்களிலும் இத்தகைய நல்லவர்கள் இல்லாமல் இல்லை. அவர்தம் வாய் மொழிகள் அன்று முதல் இன்று வரை ஏட்டில் எழுதப் பெற்றும் நாட்டில் பயிலப் பெற்றும் வருகின்றன. எனினும் பெரும்பாலன மக்கள் மனநிலை என்ன?

மேலே இத்தகைய பெரியார் வாய்ச் சொல்லைப் பெறு மின் என்று அறிவு கூறிய ஆசிரியர், ஒருவேளை அவர்களை விட்டுப் பிரிய நேரின் மறுபடியும் துன்ப நிலையில் தோய நேருமோ என அஞ்சுகிறார். அவர் ஏக்கம் 'அம்மா' என்ற சொல்வழியே வெளிப்படுகின்றது. அதற்கு வழியில்லையா

என அவர் எண்ணுகின்ருர். ஏன் இல்லே? ஆம்! அதுதான் அவர்களேப் பற்றிக் கொள்வது. 'யான் உனேத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவ தினியே' என மணிவாசகர் இறைவனேச் சிக்கெனப்பிடித்துக்கொண்டு, துன்பத்தில் இன்பங்கண்டு 'களிப்பெலாம் மிகக் கலங்கிடுகின் றேன்' என்று உள்ளத்தைத் திறந்து காட்டியபடி, நாமெல் லாம் நல்லவர்களேச் சிக்கெனப்பிடித்துக்கொள்ளவேண்டும். எப்படி? வெறும் கைகளால் கட்டிப் பிணேப் பதன்று; கயிறு கொண்டு கட்டிப் பிணிப்ப தன்று; அறையிடை யிட்டுப் பிணிப்ப தன்று. அவற்றிற்கெல்லாம் மேலாக நம் நெஞ்சத் தால் கட்டிப் பிணிக்கவேண்டும். சகாதேவன் 'எவ்வுயிர்க்கு தாய அடியிணேகள் தன் கருத்தினுல் பிணித்தான்' என்பார் வில்லியார். ஆம்! நாமும் நல்லவரை நம் நெஞ்சத்தால் கட்டிப் பிணிக்கவேண்டும். அவ்வாறு கட்டிப் பிடித்தால்—நல்லவர் இணக்கத்தால்—அல்லன நல்லனவாகும்; அரும்பிணியும் கேடும் அணுகா. இன்று உலகம் இனிய உலகாகும். நாம் அத்தகைய நல்வழி காட்டும் நல்லதாகிய அந்தப் பாடலேக் கண்டு பயன் பெறுவோமா! இதோ அப்பாட்டு

" அடைந்தார்ப் பிரிவும் அரும்பிணியும் கேடும்
முடங்குடம்பு கொண்டார்க்கு உறலால்-தொடங்கும்
பிறப்பின்று தென்றுணரும் பேரறிவி ஞரை
உறப்புணர்க வம்மாஎன் நெஞ்சு " (18-2)

ஆம்! அவர்கள் பிறப்பின் இன்றுமை உணர்ந்து இனிமை கண்ட பேறிவிஞர். அவரை உற—முற்றும் பற்றிச் சிறந்து உயர்வோமாக!

இறப்ப நினையுங்கால்

19-3-1976

பிறவியைப் பற்றியும் பிறந்த பின் பெறும் வாழ்க்கையினைப் பற்றியும் பலவாறு கூறிய ஆசிரியர் சற்றே நின்று நினைத்துப் பார்க்கிருர். பிறப்பு இன்னுததுதான் என்ருலும் யாரும் அதனிடம் கோபங்கொள்ளவோ வெறுக்கவோ இல்லையே என்பதை எண்ணிப் பார்க்கின்ருர். ''உண்டா லம்ம இவ் வுலகம்' என்ற உணர்வு அவர் சிந்தனையைக் கிளறுகின்றது. அதற்குரிய காரணத்தையும் அதே புற நானூற்று ஆசிரியர் கூறிய அடிஒன்றி எண்ணிருப்பார். 'தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே' இவ்வுலகம் வாழ்கிறது - இன்பில் திளைக்கிறது என்று முடிவு கட்டியிருப்பார் ஆம்! அவ்வாறுள்ள தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் யார்? அவர்கள் தாம் நல்லவர் - பண்பா டறிந்தவர் - பிறர் கடுஞ்சொல் பொறுத்துச் சினத்தை வென்றவர். 'பண்புடையார் பட்டுண் டுலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்' என அறம் பாடிய அந்தக் கருத்தும் இந்தப் புலவர் உள்ளத்தில் புகுந்திருக்கும். எனவே ஒரு நல்ல முடிவுக்கு வருகிருர். வந்து கண்ட உண்மையினைப் பாட்டாக வடிக்கிருர்.

பண்புடை நெஞ்சம் அவர் உள்ளத்தில் நிழலாடுகின்றது; இந்த உலகம் பாராட்டும் அவ்வுடைமையை உள்ளம் வியக்கின்றது. 'நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் பண்பு பாராட்டும் உலகு' என்ற குறள் நெறி உணர்ந்த நிலையிலே அப்பண்புடையாராம் நல்லவர்தம் உயர்நிலையினை எண்ணுகிருர். அன்பு நெஞ்சத்திலே முகிழ்க்க வேண்டிய இன்றிமையா நிலையினையும் அப்படி முகிழ்த்த உளங் கொண்ட

நல்லவர் வாழ்க்கை நெறியினையும் காணுகிறார். ஒரு மன நிறைவு பிறக்கிறது. 'உலகம் இன்னா உலகமா?' என்று திரும்பத் திரும்ப அவர் உள்ளம் கேட்கிறது. 'இதோ நல்ல பண்பாளர்கள் உள்ளார்களே! இவர்களைப் பார்; இவர் களோடு கலந்த பிறகுமா உலகு இன்னாதது என்ற உணர்வு பிறக்கும்? பின் இவர்கள் வாழ்வது எதற்காக?' என்ற கேள்விகள் பிறக்கின்றன. தடுமாறு உள்ளத்தில் தளர்ச்சி நீங்குகின்றது. நல்லவரோடு சேர்ந்தபின் நாட்டில் நலிவு ஏது? தீமை ஏது? யாவும் இன்பமே யன்றோ! இவற்றையெல்லாம் எண்ணிய அவர் உள்ளத்திலே 'இன்பமே எந்நாளும் துன்ப மில்லை' என்று அப்பரடிகள் பெற்ற துணிவு பிறக்கிறது. அப்பரடிகளார் எல்லார்க்கும் நல்லோரான இறைவனை அடைந்தமையின் அந்த இன்பத்தைப் பெற்றதாகப் பாடு கிறார். 'கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாக் கொய் மலர்ச் சேவடியிணையே குறுகினோமே-எனவே - இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என அவர் பாடுகிறார், நாலடியார் ஆசிரியரோ,

> **' இறப்ப நினையுங்கால் இன்னா தெனினும்**
> **பிறப்பினை யாரும் முனியார்—பிறப்பினுள்**
> **பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்றும்**
> **நண்பாற்றி நட்கப் பெறின் '** **(18-4)**

எனப் பாடுகிறார்.

இதில் ஆசிரியர் சொற்களை எண்ணி எண்ணிப் பெய் கின்றார். 'பண்புடையார்' என்னாது 'பண்பாற்று நெஞ்சத் தவர்' என்கிறார். உண்மையிலேயே உளத்தால் ஒட்டுவது தானே உயர்ந்தது - சிறந்தது - என்றும் உலவுவது. அதிலும் 'பண்புடை' என்னாது 'பண்பாற்றும்' என்று அதன் உயர்வைச் சொல்லாலே குறிக்கின்றார் மேலும், அவர்

களோடு கொள்ளும் நட்பு எந்த நாளும் எந்த வேளை யிலும் நீங்காதிருக்கவேண்டும் என்று கருதி, 'எஞ்ஞான்றும்' என்கிருர். அதற்கு மேலும் 'நண்பாற்றி' என நட்பின் தன்மையினை அத்தொடரால் சுட்டியதோ டமையாது 'நட்கப் பெற்றின்' என மறுபடியும் வற்புறுத்துகிருர். இத்தனையும் சொல்லிவிட்டு அது - அந்த நட்பு அவ்வளவு எளிதாகப் பெறக் கூடியதன்று என்ற உண்மையினைப் 'பெறின்' என்ற சொல்லாலே சுட்டிவிட்டார், பெறுதல் எளிது அன்றுதான். ஆனல் பெற்றுவிட்டால் - நினைத்து நினைத்து நெடிது கண்ட 'உலகம் இன்னுதது' என்ற கொடுமை மறைந்து விடும். அப்போது உலகம் இன்பச் சோலையாகத் திகழும், அப்போது யார்தான் உலகை முனிவர்? - வெறுப்பர்? - வேண்டாமென ஒதுக்குவர்? ஆகவே, இந்தப் பாடலின் வழியே உலகில் நலமுற்று வாழ- நல்ல பண்பாளர் உறவைப் பெற்று வாழ வழி காட்டி விட்டார் நாலடியாரின் ஆசிரியர். நாமும் அவர் வாய்மொழிப் படி நல்ல பண்பாட்டாளருடன் என்றும் இயைந்து இன் புற்று வாழ்வோமாக.

'அறம் வெல்லும் பாவம் தோற்கும்'

சீதையைத் தேடுமாறு வானர வீரர்களை அனுப்பிய சுக்கிரீவன் தென்திசைக்கு அங்கதன் தலைமையில் அனுமனை யும் அனுப்புகின்றான். அவர்கள் பரந்த பாரத நாட்டு எல்லைகளை யெல்லாம் கடந்து, பைந்தமிழ் நாட்டினையும் தாண்டி, தென்கரையை அடைகின்றார்கள். அவர்கள் அனை வரையும் அங்கேயே நிறுத்தி. அனுமன் விண் வழியே கடல் கடந்து இலங்கை நகரை அடைகின்றான். வழியில் எத்தனை எத்தனையோ இடர்கள்; அனைத்தும் கடக்கும் ஆற்றல் பெற்றவனாதலின், அனுமன் எல்லாவற்றையும் கடந்து இலங்கை நகரை அடைகின்றான். அங்கும் இலங்கை மாதேவி என்பாள் எதிர்க்கிறாள். அவள் தோற்றமும் ஆற்றலும் கம்பரால் பலவாறு பாராட்டப் பெறுகின்றன. ஆயினும் அத்தகையவளை அனுமன் எதிர்க்கிறான்; விண்ணில் தூக்கி எறிகிறான்; கொல்லவும் நினைக்கிறான்; ஆயினும் 'பெண்ணா யிற்றே' என இரங்குகிறான். எனவே ஓங்கி அறைகிறான். அவள் அதைத் தாங்காது அரற்று கிறாள்; பின் நிறுத்துகிறாள்; உணர்கிறாள். நாமெல்லாம் வாழ்க்கை நெறி உணர உணர்த்துகிறாள்.

கம்பன் வையம் வாழ வாழ்வு நெறி கண்டவன். அந்நெறியை நேராக நீதி நூலாக்காது, தன் காவியமாகிய இராமாயணத்தில் அங்கங்கே விளக்கமாகவும் இலைமறை காயாகவும் இட்டும் சுட்டியும் செல்கின்றான். அத்தகைய இடங்களில் இதுவும் ஒன்று.

5

அனுமன் கைப்பட்டு அடங்கிய இலங்கை மாதேவி 'அறம் வெல்லும்; பாவம் தோற்கும்' என்ற உண்மையை உலகுக்குத் தன் வாயால் விளக்கிக் காட்டுகிறாள். முக்கோடி வாழ்நாட்களைப் பெற்ற இராவணனுடைய கொடுமைகளை இலக்கியம் முழுதும் காணலாம். அவ்விராவணன் கொடுமைகளாகிய மறச் செயல்களால் அல்லலுற்றார் பலர். எத்தனையோ வகையில் அவர்கள் அக்கொடுமைகளுக்குத் தப்ப முயன்றனர். எனினும் முடியவில்லை. அதனால் இராவணன் தானே உயர்ந்தவன் எனத் தருக்கி நின்றான். அவன் கொடுமைகள் எல்லை மீறின. எத்தனை நாள்கள்? முக்கோடி நாள்கள். ஆனால் முடிவு என்ன? அவன் மறம் அழியத்தானே வேண்டும்? உலகில் அறம் என்றும் செத்து விடாது; நிலைத்து நின்று காலம் பார்த்துக்கொண்டிருக்கும். ஆம்! மறச் செயல் எத்துணை வகையில் கொடிய ஆட்சி செலுத்தினும்—எத்தனை நாள்கள் கோலோச்சி வாழினும்—முடிவில் அறம் வெல்லும் என்பது வாழ்க்கை நெறியின் உண்மைத் தத்துவம் ஆகும். அதற்குக் காலம் கடந்து விட்டது எனக் கவல வேண்டுவது இல்லை.

இன்று உலகில் சிலர் 'நாம் இவ்வளவு நேர்மையாக நடக்கிறோமே! நமக்கு எல்லாத் துன்பங்களும் வருகின்றனவே. அதோ அக்கிரமமே உருவான அவன் எத்தனைச் சிறப்பாக வாழ்கிறான்! நாமும் அப்படித்தான் வாழ வேண்டுமோ!' என எண்ணுகின்றனர்; பேசுகின்றனர். ஏன்! அதுவே இன்றைய வாழ்க்கை நெறியின் மேல்வரிச் சட்டம் எனக்கூட வாதிடுகின்றனர். அவர்களை எல்லாம் சிந்திக்கவும் முடிவு கண்டு சிரிக்கவும் வைக்கிறாள் இலங்கை மாதேவி. பிரமனின் கட்டளையால் இராவணனுக்கு முக்கோடி வாழ்நாட்கள் தொண்டு செய்தவள் அவள். முடி

வினை உணர்ந்து, தன் வாழ்வினையும் பிரமனுடைய சாபத்தையும் குரங்கின் கைப்பட்டு விடுதலை பெறுகின்ற வகையையும் காட்டி, பின்னர்,

' அன்னதே முடிந்த தைய அறம்வெல்லும் பாவம் தோற்கும்
என்னும் ஈதியம்ப வேண்டும் தகையதோ'

(ஊர்தேடு படலம்)

எனக் காட்டுகிறுள். எவ்வளவு பொருத்தமான உண்மை. ஆம்! என்றைக் காயினும் அடங்கிய அறம் வெற்றி பெறும் என்பது உறுதி. ஆனல் அதற்குக் காலம் பார்க்க வேண்டும். இன்றைய மக்களாட்சி நிலையிலும் சரி, அன்றைய மன்னராட்சி நிலையிலும் சரி இவ்வுண்மையே மெய்யாக்கப் படுவதைக் காண்கிறோம். அது மட்டுமன்றித் தனி மனித வாழ்விலும் இக்கூற்று மெய்யாக நடைபெறுவதைக் காண்கிறோம். கண்டு கொண்டே மக்களாகிய நாம் நல்வாழ்வின் நெறிவிட்டு மாற்று வழியினைப் பின்பற்றிக்கொண்டே செல்கின்றோம். அதனலேயே அற உளம் வாய்ந்த நல்லவர்கள் அவ்வப்போது தத்தம் வாழ்க்கை வழியும் வாய்மொழி வழியும் பலப்பல உண்மைகளை உணர்த்திக் கொண்டே இருக்கின்றனர். அவற்றையெல்லாம் கண்டும் கற்றும் மற்றவர்களுக்கு நாமே உரைத்தும் கூட நம் வாழ்வில் பின்பற்றத் தயங்குகிறோம். ஆனல் இந்தத் தயக்கம் நீங்கினு லன்றி உய்வில்லை.

குறைந்த வாழ்நாட்களை யுடைய நம் காலத்திய நடப்புகளைக் கண்டே குறைப்பட்டுக் கொள்ளும் நாம், முககோடி நாள்கள் மூண்ட கொடுமையை எண்ண வேண்டும் என்பது கம்பன் கருத்து. அதையும் அத்துன்ப நீக்கத்தின் தொடக்க வாயிலிலே உணர்த்துகின்றுன். எனவே எத்துணைக் கொடுமையாயினும் அது காலத்தை வென்று வாழாது என்பதும் என்றுயினும் ஒரு நாள் அக்கொடுமை அறத்தின் முன் மண்டி

யிட்டு மழுங்கி அழிய வேண்டுவதே என்பதும் உணர வேண்டுவன.

இந்த அடிப்படை உண்மையை உணர்ந்து மக்களாகப் பிறந்த நாம் நம் கடமை வழியே செயலாற்றுவோமானால் உலகில் துன்பமும் கொடுமையும் இல்லா தொழியும். வையம் வாழத் தாம் வாழ்வதே வாழ்க்கை நெறி. அந்நெறி தவறும் நிலை உண்டாயின் அதற்காக வருந்துவதோ - வாயால் பேசிக் கழிப்பதோ என நில்லாது, தாமே அறவாழ்வைக் கடைப் பிடித்து வாழ வேண்டும் என்பதும் அந்த அற வாழ்வு ஒன்றே வையத்தை என்றென்றும் வளமாக்கும் என்பதும் கம்பன் உணர்த்திய வாழ்க்கை நெறியாகும். அந்நெறி நம் வாழ்வில் மலர்வதாக!

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

எதிர்பாராது பெருமழை பெய்கிறது. எங்கெங்கும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. வற்றி வரண்ட வெற்று நிலங்களி லெல்லாம் நீர் பாய்ந்து ஓடுகிறது. அந்த நிலையில் காணுறுகள் கரை புரண்டு ஓடுவது இயற்கை யன்றோ? காணுறு ஒன்றின் வரண்ட நிலையில் தங்கிய ஒரு புணை - மண்ணோடு மண்ணாய் நின்ற ஒரு புணை பெரு வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கி விட்டது. மிதக்கும் நிலையில் அப்புணையின் செயல் யாதாயிருக்கும்? விரைந் தோடும் வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அதற் குண்டோ? இல்லையே! ஆம்! அந்த வெள்ளம் போகின்ற போக்கிலே அதுவும் செல்ல வேண்டியதுதானே.

சென்ற அப்புணையைக் கண்ட கண்கள் பல. எனினும், கருத்தில் அதன் செலவைக் கொண்டவை ஓரிரு கண்களே.

அவைதாம் புலவர் கணியன் பூங்குன்றன் கண்கள். அக்கண் வழியே பெற்ற காட்சியால் அவர் கருத்தில் ஒரு 'வாழும் நெறி' உருவாயிற்று. 'தாம் பெற்ற இன்பம் வையகம் பெறுக' என்ற உணர்வில் வாழ்ந்த அப்புலவர் இதை உவமையாகக் கொண்டு தாம் காட்ட நினைத்த வாழ்க்கை நெறியை ஏட்டில் வடித்துத் தந்துள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்தும் - மனித வாழ்வின் அடிப்படைத் தத்துவத்தை உள்ளடக்கிக் கொண்டுள்ள காரணத்தால் அது இன்றும் சிறக்க வாழ்கின்றது.

' மின்ஞெடு
வானம் தண்துளி தலைஇ, ஆனுது
கல்பொருது இரங்கும் மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் ' என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் '

என்று அக்காட்சியால் தெளிந்த உண்மையை விளக்கிக் காட்டுகிறுர் பூங்குன்றனுர். ஆனல் அத்துடன் அவர் முடித்துவிடவில்லை. அதனுல் உலகு உணர வேண்டிய அற வாழ்வை - மெய் வாழ்க்கையின் மேலாம் நெறியை விளக்க நினைந்து பாடுகின்றுர்.

'ஆதலின், மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே ' **(புறம்)**

என்று பூங்குன்றனுர் தாம் கண்ட வாழ்க்கை நெறியைக் காட்டி உலகம் என்றென்றும் இவ்வுண்மையைப் போற்ற வேண்டும் என வற்புறுத்துகின்றுர். இவ்வுலகம் இந்த நெறியைப் பின்பற்றினுல் உய்தி உண்டு! ஆனுல்......

உலகில் மனிதன் எத்தனையோ வகையில் தன்னை உயர்த்திக் கொள்ளப் பாடுபடுகிறான். ஒரு சிலர் உண்மையில் உழைக்கின்றனர். ஒரு சிலர் போலியாக வாழ்கின்றனர். பொன்னும் மணியும் புனை பூணும் பிறவும் வேண்டிப் பாடுபடுவார் பலர். பெரும்பாலோர் - ஏன் - எல்லோருமே தாம் புகழ் பெற வேண்டும் என்ற கருத்திலேயே தம் செயல்களை ஆற்ற நினைப்பர். புகழற்ற செயலாயினும் மறைத்து அதைப் புகழுற்ற தாக்க முயல்வர். இந்த அடிப்படையில் சில உண்மையான உழைப்பாளிகளின் நற்செயல்களும் மறைக்கப்படுகின்றன. தனி மனிதனும் சமுதாயமும் உலக அரசுகளும் இந்தப் 'புகழ்' ஒன்றற்காக எதையும் செய்யத் துணிவதை நாம் காண்கிறோம். ஆனால் உண்மையான புகழ் காலத்தை வென்று வாழ்வதே என உணர்வதில்லை. அத்துடன் அத்தகைய 'புகழ்ப் பைத்தியத்தால்' மற்றவரை இகழும் நிலையினையும் நாட்டில் காண்கிறோம். இந்த அவல நிலையே பூங்குன்றனார் உள்ளத்தினைத் தொட்டிருக்கின்றது.

ஒரு சிலருக்கு இயல்பாய் அமைந்த சூழல்களால் அரசியல், செல்வம், செல்வாக்கு பிறவற்றால் சில செயல்கள் செய்ய வாய்ப்பு உண்டாகும். ஒரு சிலருக்கு எத்தகைய திறன் இருப்பினும் வாய்ப்புக்கு வழி இல்லாது போகும். அதனால் முன்னவரைப் புகழ்வதோ பின்னவரை இகழ்வதோ கூடாது என்பதே பூங்குன்றனார் அறக்கட்டளை. உண்மையும் அது தானே!

தற்பெருமையாளர்தம் வெற்றுப் புகழ்ச் செயல்கள் அவர்தம் அதிகாரம் முதலியவற்றால் அவர் நாளில் சிறந்தன வாக அமையினும் கால வெள்ளம் அவற்றை அடித்துக் கொண்டு செல்வதைத்தானே காண்கிறோம். கடமைக்காகச் செயலாற்றும் மெய்ச் செயல்கள் வாழ, தம் புகழுக்காக

அமைக்கும் மாற்றுச் செயல்கள் மறைகின்றவே. புகழ் கருதாது தொண்டின் அடிப்படையில் அமைத்த தஞ்சைப் பெரிய கோயில் இன்றும் 'பெரிய கோயிலாக'வே காட்சி யளிக்கும் அதே வேளையில், அதற்குப் பிறகு வெறும் புகழ்த் தம்பமாக - தான் கங்கை கொண்ட காரணத்துக்காக - இராசேந்திரன் அமைத்த கங்கை' கொண்ட சோழபுரம் அழிந்துவிட வில்லையா? அக்பர் தம் புகழுக்காகக் கட்டிய 'பெதர்பூர் சிக்ரி'யின் நிலை என்ன?

பூங்குன்றனர் இத்தகைய நிலைகளை எண்ணித்தான் போலும் அன்றே இந்த வாழ்வின் அடிப்படை உண்மையை உணர்த்தினர். அவர்தம் ஈற்றடியில் இன்னொரு உண்மை யும் சிறக்கிறது. 'சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' என்கிறார் அவர். ஆம்! ஒரு வேளை பட்டம், பதவி, செல்வம் பிற காரணங்களால் ஒரு சிலரைப் புகழ்ந்து தான் வாழ வேண்டும் என்ற நிலை உண்டானாலும், அப்படிப் புகழ் கின்றவர் மற்றவரையாவது இகழாது இருக்கலாகாதா? தற்பெருமையாகிய புகழையே நாடி ஓடும் இன்றைய உலக வாழ்க்கைக் கிடையில் இவர் காட்டும் வாழ்க்கை நெறி எண்ணிப் பார்க்கவேண்டிய ஒன்றல்லவா? இந்தப் புகழ்ப் பொறாமையால் மடிந்த மக்கள் எத்துணையர்? மாமன்னர் எத்துணையர்? மற்றவரைத்தான் எண்ண முடியுமா? இதனா லன்றோ மாணிக்கவாசகர் 'பேர் வேண்டேன்' என்று புகழை வெறுத்து அஞ்சிப் பாடுகிறார்!

இதனால் ஒன்றும் செய்யாது சோம்பி இருக்க வேண்டும் என்பது கருத்தன்று. செய்யும் அனைத்தையும் கடமை என்று செய்ய வேண்டுமே யன்றி, வெறும் பெயருக்காகச் செயலாகாது என்பதும் அவ்வாறு செய்ய இயலாதவரை இகழ்தல் கூடவே கூடாது என்பதும் வாழ்வின் அடிப்படை

நெறிகளாகும். வாழ்வில் இப்பூங்குன்றனருடைய மெய்நெறி மலரும் நாளே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற இன்ப வாழ்வு மலரும் நாளாகும்.

'எல்லாரும் இன்புற் றிருக்க'

தெய்வ நம்பிக்கையில் திளைக்கும் நாடு நம் நாடு. அன்றும் இன்றும் ஆண்டவனை நினைத்துப் பாடுவார் பலர். 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்ற அப்பர் பெருமான் அடிக்கிணங்க அவனைப் போற்றிப் பரவிப் பயன் பெறுவார் பலர், ஆனால், அவ்வாறு பயன் பெற விரும்புவோர் அனைவரும் தம் வாழ்வு - தம்மைச் சார்ந்தவர் வாழ்வு, வளன் என்ற அடிப்படையிலேயே தம் வேண்டுகோளை இறைவன் முன் நிறுத்துவர். ஆயினும் வாழ்க்கை நெறியின் அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்தவர்தம் வேண்டுகோள் வேறு வகையில் அமைந்திருக்கும்.

அடியவர் ஒருவர் ஆண்டவனை இடையறாது தொழுது போற்றினர். பார்க்கும் இடம் எங்கும் பரமனையே கண்டார். பறிக்கும் பூவும் பருகும் நீரும் பரமன தங்கும் நிலைக்களன் களாக அவருக்குக் காட்சி யளித்தன. இத்தகைய உயர்ந்த நிலையில் தம்மை மறந்த அடியவர் முன் இறைவன் வாரா திருப்பானோ? இறைவன் காட்சி அளித்தான். 'என்ன வேண்டும்? கேள்' என்றான். நம்போன்றார் முன் இவ்வாறு இறைவன் காட்சி அளித்திருப்பானாயின் நாம் ஏதேதோ வாழ்வுக்குத் தேவையானவற்றையும் நம் வாழ்வில் மலர்ச்சி உண்டாக்கத் தக்கனவற்றையும் கேட்போம். ஆனால் அந்த மெய்யடியார் தம்மை மறந்த நிலையில் என்ன கேட்டார்?

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "

என்று கேட்டது அவர் வாய். யார் அந்த அடியவர்? நான் சொல்லாமலே உங்கட்கு விளங்கும். ஆம்! அவர்தாம் தாயுமானவர்.

நல்லவர்தம் வாழ்க்கை நெறி இத்தகையதே. நம் போன்றோர் வாழ்வெல்லாம் 'நான்', 'எனது' என்ற அகப் பற்று, புறப்பற்றின் காரணமாக அமைகின்ற நிலையில் நமக்கு வேண்டியவற்றைக் கேட்போம். தாயுமானவர் உலகம் வாழ வேண்டிய வாழ்க்கை நெறியைக் காட்ட விரும்புகின்றவர். எனவே இத்தகைய வேண்டுகோளை அவர் உள்ளம் விரும்பிக் கேட்கின்றது. இதுதானே வாழ்க்கை நெறி.

உலகில் வாழும் உயிரினத்தின் உச்சியில் வாழ்பவன் மனிதன். பிற விலங்குகளுக்கில்லாத ஒரு நல்ல பண்பு மனிதனிடத்தில் உள்ளது. அதுதான் 'தன்னைப் போல் பிறரை நோக்கும், தனிப் பண்பு. உயிர்கள் வாடினால் தான் வாடி, உலக சமுதாயம் மகிழ்ந்தால் தான் மகிழ்ந்து ஒன்றிய உணர்வில் திளைப்பதற்கே அந்தப் பண்பு துணை செய்யும். இந்த உண்மையைத்தான் உலகம் தோன்றிய நாள் தொட்டு இன்று வரை எல்லா நாட்டினரும் எல்லாச் சமயத்தினரும் வலியுறுத்தி வருகின்றனர். 'ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர் சொல்லும் தீதொழிய நன்மை செயல்' என்ற ஔவை யின் வாக்கு இந்த அடிப்படையில் எழுந்ததே யாகும்.

ஆனால் இன்றைய மனித வாழ்வு இந்த நிலையில் இருக் கின்றதா? இல்லையே. தனி மனிதனாயினும் சமுதாயமாயினும் பேரரசுகளாயினும் இந்த நெறியில் செல்லவில்லை என்பது

கண்கூடு. தத்தம் வாழ்வும் வளமும் சிறக்க, எத்தகைய கொடுமையும் செய்யத் தயங்காத மக்களினமே அதிகமாக வளர்ந்து வருவதைக் காண்கின்றோம் தாம் வாழ மற்றவரை வருத்தினாலும் தவறில்லை என்ற உணர்வு மக்களிடம் மிக்குள்ளதை அன்றாட வாழ்க்கை நெறி விளக்குகின்றது. இதனாலேயே நாட்டிலும் உலகிலும் பொதுவாக அமைதியின்மையும் அல்லலும் மிக்கிருக்கக் காண்கிறோம். இது நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகின்ற காரணத்தால் உலகம் என்னாகுமோ என்ற உணர்வு நல்லவர் உள்ளங்களை வாட்டுகின்றது.

இத்தகைய அவல நிலைக்குக் காரணம் என்ன? நாம் மேலே காட்டிய சுய நலம் ஒன்றேதான். தாயுமான அடிகளார் இச்சுயநலத்தினைப் பொது நலத்தில் மறந்து விட்டார். நாட்டுத் தலைவர்கள் - சமய போதகர்கள்-தத்துவ ஞானிகள் 'நாம் நாட்டுக் குரியவர்கள்' என்பதை மறந்து, 'நாடு நமக் குரியது' என எண்ணுகின்ற காரணத்தினால்தான் தொல்லையும் துன்பமும் உண்டாகின்றன. இந்த நிலை மாற வழி என்ன? 'நான்' என்ற உணர்வு 'நாம்' என்ற உணர்வாக மாறின் அல்லது உய்ய வழியில்லை. இந்த 'நாம்' என்பதில் 'எல்லாரும் எல்லாமும்' அடங்கிவிடும்.

தாயுமானவர் இவ்வாறு எல்லாரும் இன்பம் பெற வேண்டும் என்றே விழைகின்றார். இந்த விழைவைத்தான் ஆண்டவன் முன் வைத்து வேண்டுகின்றார். வேண்டிய வரத்தைக் கேள் என்ற இறைவன் முன் மனமுருகி 'எல்லாரும் இன்பம் பெற வேண்டும்' என்ற வரத்தைக் கேட்கின்றார் அவர். இறைவன் அந்த வரத்தைக் கொடுத்து, 'இது பொதுவாக அனைவருக்கும் பொருந்துவது; உனக்காக ஏதேனும் வேண்டுமாயின் கேள்' எனக் கேட்டிருப்பார்

போலும். அதனால்தான் அடுத்த அடி அவர் உள்ளம் காட்டும் அடியாக அமைந்துள்ளது. 'இறைவனே! உலக வாழ்வன்றித் தனி வாழ்வில்லை; உலகம் வாழ்ந்தால் - உயிர்கள் இன்ப வாழ்வில் வாழ்ந்தால்-நான் இன்பம் பெற்றவன் ஆவேன். எனவே எனக்கெனத் தனியாக வேறொன்றும் தேவையில்லையே' என அவர்தம் நல்லுள்ளம் எண்ணியிருக்கும். வாய் அவ்வுலக உயிர்கள் இன்புறத்தக்க வேண்டுகோளை 'அல்லாமல் வேறொன் றறியேன்' எனப் பாடியுள்ளது. இதுவே வாழ்க்கை நெறியின் அடிப்படைத் தத்துவமாகும். இந்த உண்மையை உணராது சுயநலத்தில் மக்கள் சிக்கிய காரணத்தினாலேயே எல்லா வகையான கொடுமைகளும் நடைபெறுகின்றன எனக் கண்டோம். இந்த நல்லவர்தம் நூல்களை நாள்தோறும் ஓதியுணர்ந்து வளரும் மனித சமுதாயம் இந்த வேண்டுகோளையே அன்றாட வாழ்வின் வேண்டுகோளாக அமைத்துத் தெய்வ நலம் ஓம்புமாயின் - அதன் வழியே செயல்படுமாயின் உலகம் இன்பச் சோலையாக மாறாதோ? இதில் வாழும் உயிர் வாழ்வு அன்பு வாழ்வாய்ச் சிறக்காதோ! இந்த அன்பு விளையும் நாள் என்று வருமோ அன்றே வைய வாழ்வு செம்மையாகும். அந்நாள் விரைவில் வருவதாக!

ஊழ் வினையும் ஆள் வினையும்

வள்ளுவர் வையம் வாழ வழி வகுத்தவர். உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் தம்முள் கலந்து வேறுபாடற்று ஒன்றிய வாழ்வில் திளைக்க வேண்டும் என்பதே அவருடைய ஆசை. அந்த அடிப்படையில் மறம் கடிந்து அறம் ஓம்பும் வாழ்வுக்கு உரிய ஆக்க நெறிகள் பலவற்றை வகுக்கின்றார்

அவர். எடுத்துக்காட்ட விரும்பும் ஒவ்வொரு பொருள் பற்றியும் திட்ட வட்டமாக அறிவிக்க நினைக்கிறார்; அறிவிக்கவும் செய்கிறார். எனினும் இருவேறு பொருள்களின் திறனும் செம்மையும் உயர்வும் பயனும் விளக்க நேரிடும் போது அவர் நடுநிலை பிறழாது உள்ளதை எப்படியும் கூறி விடுகின்றார். ஆழ்ந்து நோக்கின் அவரது தெளிந்த புலமை வழி உருவாகும் உண்மையின் செம்மை உலகுக்கு நன்கு புலனாகும். ஒவ்வொரு அதிகாரத்திலும் எடுத்துக் கொண்ட பொருளின் செம்மையினையோ அன்றிக் கொடுமையினையோ அதன் எல்லையின் கோடியிலே நின்று காட்டும் வள்ளுவர், அப்பொருள்களை இணைத்துக் காட்டும் போது அவற்றுள் ஒன்றன் மேலாய்ப் பொருந்திய மற்றொன்றன் உயர்வினைக் காட்டத் தவறுவதில்லை. எடுத்துக் காட்டாக ஒன்றினைக் காண்போம்.

அறங்களைப் பல வகையில் வகுத்துக் காட்டும் வள்ளுவர் பொய்யாப் பெரு நெறியினையும் அறத்திற் குள்ளேயே அடக்குவர். உள்ளத்தால் பொய்யாது ஒழுகுவார் உயர்வைப் பலபடப் பாராட்டுகின்றார் வள்ளுவர். ஒருவன் பொய் சொல்லாதிருப்பானாயின், அவன் வேறு எந்த அறமும் செய்யா நிலையிலேயே உயர்வு பெறுவான் என வற்புறுத்திக் காட்டுவார் அவர்.

" பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று "

என்ற குறளில் அதன் ஏற்றத்தை உச்சியில் வைத்துப் போற்றுகின்றார். பரிமேலழகரும் பிறரும் இக்குறளுக்குப் பல வகையில் உரைகள் கூறுவர். இத்தகைய உயரிய நிலையில் காட்டிய பொய்யாமையே உலக அறங்களிலெல்லாம் மேலானது என்றுதான் இந்த அதிகாரத்தோடு

நிற்பார் நினைப்பர். ஆயினும் பிற அதிகாரங்களைப் பயிலும் போது வள்ளுவர் ஏற்றம் இதனினும் மேம்பட்டு நிற்பதை உணர முடியும். கொல்லாமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவருடைய உயரிய அறம் தெளிவாகக் காட்டப்பெறுகின்றது. கொல்லாமையே உயர்ந்த அறம் என்றும், முன் வேறு அறம் ஆற்று வேண்டா நிலையில் போற்றப் பெற்ற பொய்யாமை அதற்கு இரண்டாவதாகவே வைக்கப் பெற வேண்டிய தென்றும் காட்டுவர் வள்ளுவர். இதனால் பொய்யாமையைத் தாழ்த்திய தாகாது. அதன் ஏற்றத்தின் சிறப்பை எல்லாம் திட்டமாகக் காட்டிய பின்பே, அதனினும் மேம்பட்ட முதலாவதாகிய கொல்லாமையைக் காட்டுகிறார் அவர். எனவே பொய்யாமை பிற அறங்களிலெல்லாம் மேம்பட்டது என்பதும் உண்மை; அதனினும் மேம்பட்ட ஒரே அறம் கொல்லாமை என்பதும் தெளிவு. இந்த வகையில்தான் தாம் கொண்ட பொருளை விளக்கிச் செல்வர் வள்ளுவர்.

> " ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
> பின்சாரப் பொய்யாமை நன்று "

என்பது அவர் வாக்கு.

இந்த அடிப்படை நெறியில் நன்று பார்த்தால் வள்ளுவர் ஊழ் வினையையா அன்றி ஆள் வினையையா— எதைச் சிறந்தது எனக் காட்டுகின்றார் என்பது நன்கு புலனாகும். வள்ளுவர் இரு வேறு வினைகளைப் பற்றியும் இரு வேறு அதிகாரங்களில் திட்டவட்டமாக விளக்கிக் காட்டுகின்றார். இரண்டும் ஒன்றை ஒன்று வெல்ல முடியா நிலையில் இருப்பது போன்று தோன்றினும், வள்ளுவர் தம் குறள் வழியே இரண்டில் எது

சிறந்தது என்பதைத் தெள்ளத் தெளியக் காட்டி விடுகிருர். இரண்டு அதிகாரங்களிலும்— இருபது குறட் பாக்களிலும் இரு வேறு வினைகள் பற்றிக் காட்டினுலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறட்பாவினை எடுத்துக் காணின் வள்ளுவர் கொள்கை தெள்ளிதிற் புலனுகும்.

ஊழே அனைத்திலும் மேம்பட்டது என்பது உலகத்தார் கொள்கை. வள்ளுவர் அக்கொள்கையை மறுக்கவில்லை- அதனினும் பெரு வலிவுள்ளது வேறு இல்லை என அவரும் வற்புறுத்துகின்ருர். ஆனுல் அது ஆள்வினை உடைமை யோடு போட்டியிட்டு வெல்லுமா? இக்கேள்விக்கு வள்ளுவர் அவருடைய இயல்பான தெள்ளிய நெறியிலேயே விடை தருகின்ருர்.

வகுத்தான் வகுத்த வகையில் வாழ வைக்கும் ஊழ்வினை யைப் பற்றி வள்ளுவர் பத்துக் குறள் வெண்பாக்களால் நன்கு விளக்குகின்ருர். அவற்றுள் இறுதிக் குறளில் "ஊழிற் பெருவலி யா வுள?" என்ற வினுவையும் எழுப்பி, இல்லை என விடை தருமாறு முடிக்கின்ருர். ஊழினும் வேருய பல - ஆள்வினை உடைமை, ஊக்க முடைமை போன்ற செயலாற்றும் திறன்கள் - வந்து சூழ்ந்தாலும் இவ்வூழே அவற்றின் முன்னிற்கும் என்று காட்டுகின்ருர்.

> " **ஊழிற் பெருவலி யாவுள மற்ருென்று**
> **சூழினும் தான்முந் துறும்** '

என்பது அவர் வாக்கு.

இங்கே பிற செயல்களால் முன்னேறவோ வேறு வகையில் செயலாற்றவோ மனிதன் முயன்ருலும், அவற்றிற் கெல்லாம் முன் ஊழ்வினை வந்து தானே முட்டுக்கட்டையிடும் என்றுதான் வள்ளுவர் கூறுகின்ருர். இதனுல் நாம்

மற்றோர் உண்மையை உணர்ந்து கொள்கிறோம். மற்றொன்று சூழும் காலத்து இவ்வூழ் முன்னிற்குமே ஒழிய அது வெல்லும் என்று வள்ளுவர் கூறவில்லை: 'முந்துறும்' என்பது அவர் வாக்கு. முன்வருவதெல்லாம் வெல்லுவ தாகுமோ? செயலாற்றும் வீரன் தன் ஆள்வினையின் திறத் தால் முன்னிற்பதைத் தள்ளிவிட்டு, மேலே முன்னேறிச் செல்ல முடியுமே! இதைத்தான் வள்ளுவர் ஆள்வினை உடைமையில் காட்டுகின்றார். வேறு மேற்கொள்ளும் முயற்சிகளைத் தடுக்கும் வகையில் ஊழ் முன்னிற்குமே யன்றி, அம்முயற்சி வலுவுடைத்தாகி ஊழை உடைப்ப தாயின், தான் அதை வெல்வது கூடாது என்பதே வள்ளுவர் காட்ட நினைத்த உண்மை. மற்றவைகளைத் தடுக்கும் வகையில் ஊழ் முன்னிற்குமே ஒழிய அது வெற்றி பெறாது என்பது தெளிவு. இந்த உண்மையினையேதான் ஆள்வினை உடைமை என்னும் அதிகாரத்தில் தெள்ளத் தெளியக் காட்டி விடுகின்றார் வள்ளுவர்.

ஊழினைப் பற்றிக் கூறும் போது 'தான் முந்துறும்' என்று காட்டிய வள்ளுவர், ஆள்வினை உடைமையைப் பற்றிக் கூறும் போது, அவ்வினை யுடைமை 'ஊழையும் உப்பக்கம் காணும்' நிலையினைத் தெளிவாகக் காட்டி விடு கின்றார். தெய்வத்தான் ஆகாதனவும் ஆள்வினை யுடைமை யால் ஆகும் எனக் காட்டிய வள்ளுவர், அங்கே ஊழ்வினை வந்தால் என்னாகும் என்ற வினாவினை எழுப்பி, அதற்குப் பதில் உரைப்பார் போன்று,

> **" ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
> **தாழா துஞற்று பவர் "**

என விளக்கங் காட்டுகின்றார்.

எனவே, வள்ளுவர் கருத்து ஊழ்வினையிலும் ஆள்வினை யுடைமையே வலுவுடைத் தென்பதும், திண்ணிய ஆள்வினை யால் செயலாற்றும் எவரும் ஊழுக்கோ அதைச் செலுத்துவ தாகக் கருதும் தெய்வத்துக்கோ அஞ்ச வேண்டுவ தில்லை யென்பதும், அவ்வாழ்வினை யுடையார்க்குத் தெய்வம் ஊழ் வினை நீக்கிச் செம்மை நலம் அருளும் என்பதும் தெளி வாகும். இந்த அடிப்படையில் ஆள்வினை, ஊழ்வினையை ஓட்ட வல்லது என்பதை உணர்ந்து, வள்ளுவர் குறளை வாழ்விடைக் கொள்ள விரும்பும் நாம் நம் செயலைச் செம்மையாகச் செய்து சிறப்புறுவோமாக.

நல்ல உள்ளம்

உலக நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் அடிப்படைக் காரணம் மனித உள்ளமே. உள்ள நெகிழ்வும் உணர்வும் பிற உயிர்களுக்கு இருப்பதாக அறிஞர்தம் ஆய்வுகள் ஓரளவு விளக்கினாலும் அவற்றைச் செயலாற்றும் திறனும் நெறியும் அப்பிறவுயிர்களுக்குக் கிடையா. எனவே, மனித உள்ளமும் அதன் வழி அரும்பும் உணர்வுமே உலக நெறியை ஒருவழிப் படுத்துகின்றன என அறியலாம்.

உலகில் எத்தனையோ கோடி மக்கள் வாழ்கின்றார் களே; அவர்தம் உள்ளம் அத்தனையும் எப்படி உலகை ஒருவழிப் படுத்த இயலும் என்ற ஐயம் எழலாம். ஆயினும் மக்கள் அனைவரும் அந்த உள்ள உணர்வைச் செயல்படுத்த நினையா நிலையும் நினைப்பினும் செயலாற்ற முடியாச் சூழலும் எங்கோ ஒருசில மக்களின் உணர்வுவழி உலகம் செல்லக் காரணமாகின்றன. அந்த ஒருசில உள்ளங்கள் நல்ல உள்ளங்களாக அமைந்துவிடின் நாடும் உலகமும் நன்மை

பெற்றுச் சிறக்கும்! அல்லாவிடின் என்னுகும்? எடுத்தியம்ப வேண்டா!

இந்த உலகினை நல்லவழியினில் ஆற்றுப்படுத்தும் நல்ல உள்ளங்களை அன்று தொட்டுத் தமிழறிஞர் எண்ணிப் பார்த்துப் பார்த்து ஏட்டிலும் வடித்துச் சென்றுள்ளனர். உள்ளம் தூய்மையாக இருந்து அதன்வழியே செயலாற்றுவதே எல்லா அறங்களுக்கும் மேம்பட்டதாகும் என்ற உண்மையை வள்ளுவர்,

'மனத்துக்கண் மாசில னுதல் அனைத் தறன்' என்று வரையறுத் துள்ளனர். அப்படியே நல்ல செயல்கள் ஆற்றுவதற்கான அடிப்படையான உள்ளம் மக்களுக்கு அமைய வேண்டும் என்ற உண்மையினையும் அவ்வுள்ளம் நிலை கெட்டு அல்லாதனவற்றை நினைக்கும் அவல நிலையினையும் வள்ளுவர் பலவிடங்களில் சுட்டிக் காட்டத் தவறவில்லை. 'உள்ளுவதெல்லாம் உயர் வுள்ளல்', 'உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக் கள்ளத்தால் கள்வே மெனல்' என்பன அவர் வாக்குக ளன்றோ!

இந்த நல்ல உள்ளத்தை நாட்டில் எப்படித் தேடிக் கண்டு பிடிப்பது? இந்த வினுவுககு விடையாக அன்று முதல் இன்று வரை எண்ணற்ற வகையில் விடை காட்டி வருகின்றனர் பலர். உலகமே அந்த நல்லுள்ளத்தாலும் அதன்வழி அரும்பும் சான்றுண்மையாலுமே வாழ்கின்றது என்ற உண்மையை வள்ளுவர் பல பாக்களில் காட்டுகின்றுர். இந்த நல்லுளத்தாரை எண்ணித்தான்,

" எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே "

என்று பண்டைப் புலவர் பாரினை வாழ்த்துகின்றுர்.

இந்த நல்லுளத்தில் அரும்பும் உணர்வு உலகை வாழ் விக்கின்றது. அவ்வுணர்வில் இன்னுர் இனியார் என்ற வேறுபாடு இல்லை - உற்றுர் அற்றுர் என்ற மாறுபாடு இல்லை - மாற்ருேரும் இல்லை; கேளிரும் இல்லை. அவ்வுள்ளத் துக்கு ஓரறிவுடைய உயிரும் ஆறறிவுடைய உயிரும் ஒன்றே. உளத்தன்மையில் வேறு படினும் உயிர்த்தன்மையில் புல் முதல் மனிதன் வரையில் அனைவரும் ஒன்றே என்ற உண்மையைப் பண்டைய புலவர் பாராட்டியுள்ளனர்; இன்றைய அறிவிய லறிஞர் உணர்ந்து காட்டுகின்றனர். நாத்தழும் பிருப்பப் பாடாதாயினும் முல்லைக்குத் தேர் ஈந்தது பாரியின் நல்ல உள்ளம். மயிலுக்குப் போர்வை ஈந்தது பேகன் உள்ளம். 'எல்லோர்க்கும் கொடுமதி' என்று அறிவுறுத்தியது புலவர் உள்ளம். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியது' வள்ளலார் உள்ளம்.

இந்த நல்ல உள்ளங்கள்தாம் நாட்டில் விழாக்களைத் தோற்றுவிக்கக் காரணமாயின. 'நாம் வாழ்வது இருக் கட்டும்; நாடு வாழ்கிறதா?' என்ற அவ்வுள்ளங்கள் எழுப் பிய வினுவுக்கு விடைகளே இந்த விழாக்கள்.

" பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி "

வள்ளுவ முதுமகன் இந்திர விழாவினை உலகுக்கு அறிமுகப் படுத்துகிருன் என்று இருபெருங் காப்பியங்களும் நமக்கு உணர்த்துகின்றன. ஆம்! எல்லா நாட்களிலும் மக்கள் அவலம் நீங்கி நலமெலாம் பெற்று வாழவேண்டியவர்களே! ஆயினும் எத்தனையோ எதிர்பாராத சூழல்களாலும் பிறவற் ருலும் அந்நிலை முற்ற இல்லையாயினும் விழாக்காலங்களிலா யினும் அந்த நிலை அரும்ப வேண்டும் எனக் கருதிய அந்த

நல்ல உள்ளங்கள் அப்படி நினைக்கின்றன. ஆம்! நாட்டில் பசியும் பிணியும் பகையும் இல்லாத நாளே விழா நாள்! அப்படியே மழை பொழிந்து அதன்வழி வளங்கொழிக்கக் கண்டு மகிழும் நாளே விழா நாள்! தமிழர்தம் விழாநாள்கள் பலவற்றுள்ளும் சிறந்த இப்பொங்கல் நாள் இந்த அடிப் படையில் அமைந்ததே யாகும்.

இத்தகைய நல்ல உலகைக் காண விரும்பும் நல்ல உள்ளங்கள் தம் மாசினை முதலில் போக்கிக்கொள்ள வேண்டும். புறத் தூசினையும் அகத் தூசினையும் 'தீயினில் தூசாகச்' செய்து இருவிடத்தும் தூய்மை காணும் நாளே போகி நாள். இன்னலுக்கும் இடருக்கும் 'போக' எனப் போகி யிட்டபின், அடுத்த நல்ல நாளில் உள்ளங்கள் மகிழ்ச்சியினில் பொங்குகின்றன. அந்தப் பொங்கிய நல்லு ளத்தில் பரந்த உலகம் இன்பில் திளைக்கவேண்டும் என்ற உணர்வு அரும்ப, உலகைச் சுற்றி நோக்கிடுகின்ற விழா வாகப் பொங்கல் அமைகின்றது. மனிதன் மட்டும் இன்பில் திளைத்து இனிமையில் பொங்கினுல் போதாது; 'எல்லா உயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே நல்லது' என்ற உணர்விலே மாட்டுப் பொங்கல் அமைகின்றது. அடுத்து அதையும் தாண்டி, அனைவரும் அனைத்தும் இன்பில் திளைக் கின்றனரா - திளைக்கின்றனவா என்ற நிலை, காணும் பொங்க லாக அமைகின்றது. இவ்வாறு மாசு நீங்கிய உள்ளம் காணும் நானிலத்தை வாழவைக்கும் நல்விழாவாக இந்தப் பொங்கல் விழா அமைகின்றது.

வற்ருு வளம் வாய்ந்த பொன்னுர் தமிழகத்தில் இந்த ஆண்டில் இயற்கைச் சூழலால் வசி யின்றி வளம் சுருக் கினுலும் நல்ல உள்ளங்கள் அதைக் கண்டு நைந்தாலும் - வருங்காலம் வளமாகும் நிலையில் நாம் உள்ளோம் என்பதை

மறக்கலாகாது. அடுத்து வரும் பொங்கல் விழா 'வசியும் வளமும்' சிறக்கும் விழாவாக அமையவேண்டும் என்று நல்ல உள்ளங்கள் வாழ்த்துகின்றன. எனவே இடுக்கண் வருங்கால் இனிய முகத்துடன் சிரித்து, வருங் காலத்தில் வையம் வற்றா வளம் பெறவேண்டும் என வாழ்த்தும் நல்ல உள்ளங்கள் நமக்கு வழி காட்டிகளாக அமைய நாம் முன்னேறவேண்டும்-- முன்னேறுவோம் என்பது உறுதி.

அகத்தும் புறத்தும் மாசகன்ற நல்ல உளத்தோடு நாம் அனைவரும் இந்தப் பொங்கல் நன்னாளில் நாடு 'வசியும் வளனும் சுரந்து' ஓங்கவேண்டும் என வாழ்த்துவதுடன் அந்த நல்ல வாழ்வுக்கு அயராது உழைக்கும் ஆக்கப் பணியை மேற்கொள்ள உறுதி பூணுவோமாக! உள்ள உரமும் உடல் உழைப்பும் ஒருங்கே அமையின நாடு நாடாகும். நாமும் தலை நிமிர்வோம்! இந்த நல்ல உணர்வோடு - நல்ல உள்ளங்கள் உறவாடும் நிலையில் இப்பொங்கல் விழாவைக்கொண்டாடிப் புத்துலகப் பொன் வாழ்வை நோக்கி நடப்போமாக! வாழ்க நல்ல உள்ளம்! வளர்க வசியும் வளனும்!

எமது புதிய வெளியீடுகள் (1975-76)

ஆசிரியர் அ. மு. ப. வின் நூல்கள்

1.	கங்கைக் கரையில் காவிரித் தமிழ்	5-00
2.	கொய்த மலர்கள்	4-50
3.	கவிதை உள்ளம்	5-00
4.	தமிழ் உரைநடை	7-00
5.	19-ம் நூற்றுண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி ('கல்கி' சொற்பொழிவுகள்)	7-00
6.	சிறுவர்களுக்கு	2-50
7.	நாலும் இரண்டும்	2-50
8.	வாஞெலி வழியே	3-00
9.	Temples & Legends of Tamilnadu (In English)	Under Print

தமிழ்க்கலைப் பதிப்பகம்—சென்னை 30